# வன்மை நிலைப்பட்ட மோதுகைகளிருந்து நியாயமான சமாதானத்திற்கு: சமாதான கட்டியெழுப்புகைக்கான மூலங்களாக மீளுயிர்ப்பூட்டலும், (மீள்) ஒருங்கிணைப்பும்

மார்ட்டினா ப்பிஷர்




1 அறிமுகம் 460

2 பதங்களும் எண்ணக்கருக்களும். 461

3 வெற்றிகரமான மீளுயிர்ப்பூட்டலுக்கும் சமாதான கட்டியெழுப்புகைக்கும் வேண்டிய கட்டமைப்புக்கான முன்நிபந்தனைகள் 467

கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பு ரீதியான முன் நிபந்தனைகள் 468

4 மீள் ஒருங்கிணைப்பின் சவால்கள் 471

5 நல்ல செய்முறை வடிவமைப்பு:உள்ளூர் ஆற்றுதிறனை வலுப்படுத்தலும் பெண்களின் தேவைகளுக்கு தீர்வு காணுதலும், பால் நிலைக்கூருணர்வும். 480

6 திறந்த வினாக்கள் 485

7 உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும் 492

# வன்மை நிலைப்பட்ட மோதுகைகளிருந்து நியாயமான சமாதானத்திற்கு: சமாதான கட்டியெழுப்புகைக்கான மூலங்களாக மீள் உயிர்ப்பூட்டலும், (மீள்) ஒருங்கிணைப்பும்

மார்ட்டின ப்பிஷர்

## 1 அறிமுகம்

20 ஆம் நூற்றாண்டின் கடைசித் தசாப்தத்தில் 43 நாடுகள் வன்முறை மோதல்களிலிருந்து விடுபடும் நாடுகளாக நோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அநேகமானவை அரசுகளினுள் இடம்பெறும் யுத்தங்களாலும், சிவில் யுத்தங்களாலும் பாதிப்புற்றவையாகும். இவற்றுள் அநேகமானவை மிகவும் ஏழ்மையானவை என்னும் வகைப்பிரிவை சேர்ந்தவையாகும். (பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைப்பின் அளவுகோல்களின் பிரகாரம் (OE CD) அபிவிருத்தி குன்றிய நாடுகள்). அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்க உயர் வீகிதாசாரத்தினர் ஆபிரிக்கக் கண்டத்தில் வாழ்ந்தனர். சர்வதேச சமூகத்தினர் யுத்தத்தால் அழிவடைந்த நாடுகளுக்கு நூறு பில்லியன் டொலர்களுக்கு அதிகமான தொகையை உதவியாக வழங்குவதாக வாக்களித்தனர். (போர்மன்,பட்ரிக் மற்றும் சலோமன்ஸ் 2000,ப) இவை அகநிலையமைவுகளைக் கட்டியெழுப்பி முன்னாள் யுத்தத் தரப்பினர்களை அகிம்சை வழியில் மோதுகையைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் வலியுறுத்தி, பெருளாதார அபிவருத்திக்கும், பங்குகொள்ளல் ஆட்சி முறைக்கும் பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டவையாகும்.



குறுகிய மனப்போக்குடன் கடந்த காலங்களில் செயற்பட்ட சர்வதேச முகவர் நிலையங்கள் வன்செயல் மோதல்களுக்குப் பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அந்நாடுகளில் தமது செயற்பாடுகளைத் தொழில்நுட்பப் புனர்நிர்மாணமாகக் ஆக்கி விட்டதாக நிபுணர்களும், அரசியல் செயற்பாட்டாளர்களும் தெரிவித்துள்ளனர். யுத்தத்திலிருந்து சமாதானத்துக்கான நிலைமாற்றம் என்னும் கடினமான நீண்டகாலச் செயல்முறைக்கு ஆதரவு வழங்குவதற்கு ஒரு பரந்த எண்ணக்கருவாக்கம் அவசியப்படுகிறது. இந்த அத்தியாயம் மேலும் மோதுகைகளைத்தடுக்கும் அர்த்தத்தில் மோதலுக்குப் பிந்திய மீளமைப்பை வெற்றிகரமாக்குவதற்கு அவசியமான பல்வேறு பணிகள் குறித்த ஒரு பொதுப்பார்வையை வழங்குவதோடு, இதில் சில பதற்றநிலைகளும், அது சம்பந்தமான இக்கட்டு நிலைகளும் இனங்காணப்பட்டு, கலந்துரையாடப்படுகின்றன.

இது வெளிக்களத்தில் பணிகளில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் பல்வகையான அணுகுமுறைகள், உபாயங்களுக்கிடையிலான கூட்டிணைவை உள்ளடக்குகின்றன. நான்காவது பகுதி அகதிகள் இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் முன்னாள் போராளிகளை (மீள்) இணைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. அது பிரதானமாக பொஸ்னியா - ஹேர்சி கொவீனா (BIH) அனுபவங்களின் உதாரணங்களினால் எடுத்துவிளக்கப்படுகின்றது. ஐந்தாவது பகுதி உள்ளூர் மக்கட்தொகையினரின் தேவைகள்குறித்த உணர்வுகள் பெண்களின் சாத்தியவளங்கள் மற்றும் குறிப்பிட் பண்பாட்டு சூழமைவுகளில் பால்நிலை வகிபாகங்களின் தன்மை என்பவற்றை உள்ளடக்கும் இடையீட்டுக்கான மிகச்சிறந்த நடைமுறை வடிவமைப்பின் அம்சங்கள் குறித்துக் கலந்துரையாடுகின்றது. அத்தியாயத்தின் இறுதிப்பாகம் இக்கட்டு நிலைகளையும் தீர்க்கப்படாதுள்ள திறந்த வினாக்கள் பற்றியும் அழுத்திக் கூறுகின்றது.

## 2. பதங்களும் எண்ணக்கருக்களும்

வன்முறை மோதலுக்குப் பின்னரான மனிதநேய உதவி மற்றும் அபிவிருத்திவேலை குறித்த முக்கிய பணிகளை விபரிப்பதற்குப் பல பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன: புனர் நிர்மாணம், மீளமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், சொந்தஇடங்களுக்கு மீண்டும் திரும்புதல், மீளிணைப்பு போன்றவையே அவையாகும். 1990 களின் பிற்பகுதியில் சர்வதேச முகாமை நிறுவகங்கள் இப் பதங்களை "மோதலுக்குப் பிந்திய" என்னும் பெயர் உரிச்சொல்லுடன் இணைத்துப் பேச ஆரம்பித்தனர். இது ஒரு நிலைபேறான போர்நிறுத்தத்துக்குப்பின்னரே ஒருபுறத்தில் நிவாரணத்துக்கும் அப்பால் சென்று ஏதோ ஒரு வகையிலான சமூகஇயல்புநிலை, சாத்தியம் என்பதையும், மறு புறத்தில் அகதிகள் இயன்றளவு விரைவில் திரும்பிவருவதை நியாயப்படுத்தவும் முடியும் என்பதையும் வற்புறுத்தும் வகையில் செய்யப்பட்டதாகும். போர்மன் மற்றும் சலோமன்ஸ் (2000, ப.2) என்போரின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் மோதலுக்குப்பிந்திய நிலை என்பது வழக்கமாகப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது *(....). ஏதோ ஒருவகையிலான மீளிணைப்பு மற்றும் மீளமைப்பு நடவடிக்ககைகள் ஆரம்பிக்கக்கூடிய மட்டத்திற்கு பகை நடவடிக்கைகள் தவிர்ந்துள்ள காலப்பகுதி. பல விடய நிகழ்வுகளில் இது அகதிகள் அல்லது உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்கள் திரும்பி வரத்தொடங்குவதால் குறிக்கப்படலாம். ஆகவே, இவ் வரைவிலக்கணம் தொடர்ச்சியான தீவிரம் குறைந்த மோதலில் இருந்து ஒரு பலவீனமான சமாதான நிலைக்கும், பின்னர் ஒரு மோதுகை முடிவுறுத்தலுக்கும் செல்லும் பரந்த வீச்சிலான மோதலுக்கு பிந்திய காட்சிப்புலங்களை உள்ளடக்குகின்றது.*

யுத்தத்துக்குப் பிந்திய சமூகங்களின் சமூக வாழ்வும், அரசியலும், பொருளாதாரமும், இராணுவமயப்படுத்தலும் தனிநபர்களினதும் மற்றும் சமுதாயங்களினதும் ஆழமான உளஅதிர்ச்சி வடுக்களும் பாரதூரமான பெறுபேறு விடயங்களாக விளங்குகின்றன.



அதனால்தான் கரிட்டாஸ் சுவிஸ் (2000,ப.83) வெளியிட்ட ஒரு நிலைப்பாட்டு ஆவணம் புனர்நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வு போன்ற பதங்களைப் பயன்படுத்துவதை விமர்சிக்கிறது. அவை பிரதானமாக பௌதீகரீதியான சேதங்களை சரிப்படுத்துவதில் கவனத்தை ஒருமுகப்படுத்தி, யுத்தத்துக்கு முன்பிருந்த சூழ்நிலைகளை மீட்டெடுப்பதே பிரதான குறிக்கோள் என்று கூறுவதே இதற்கான காரணமாகும். அதற்குப் பதிலாக மோதுகையின் காரணங்களை அறிந்து, அவற்றுக்குத் தீர்வுகாண்பதே அவசியப்படுவதாகும். வட அயர்லாந்தின் சமாதானச் செயல்முறையில் துடிப்பாகப் பங்குபற்றிய மாரி பிரிட்ஸ்டவ் மற்றும் அவரின் சகபாடிகள் போன்றோர் இத்தகைய வாதங்களை ஆதரிக்கின்றனர். அவர் இவ்விரண்டு பதங்களுக்கும் பதிலாக உடன்படிக்கைளுக்குப் பிந்திய அல்லது தீர்வுக்குப்பிந்திய சமாதானப் பணி என பயன்படுத்தப்படவேண்டுமென்று கூறுகிறார். (பெட்டி 1ஐப் பார்க்கவும்).

**பெட்டி 1 : வட அயர்லாந்தில் நிலைநின்ற நோக்கு**

இங்கு வட அயர்லாந்தில் நாங்கள் பதங்கள் குறித்துப் பெரிதும் வாதிக்கின்றோம். புனர்நிர்மாணம் என்பது பயனற்ற ஒரு பதமாகும் - அது ஒரு தரப்பினருக்கு வன்செயலற்ற ஒரு காலம் சம்பந்தமான ஏக்கத்தின் எதிரொலியாகத் தோன்றுகிறது. ஆயினும் மற்றத் தரப்பினருக்கு அது கட்டமைப்பு வன் செயல்கள் நிறைந்த ஒன்றாகத் தோற்றமளிக்கின்றது.(....)

புனர்நிர்மாணம் என்பதன் கருத்து சமூகத்தை மோதுகைக்கு முன்பிருந்தது போன்று புனரமைப்பதாகும்.(....) இன்றைய மோதுகைகளுள் அநேகமானவை உபதேசத்தன்மை கொண்டவையாகும். அவை அரசாங்கங்கள் சமத்துவத்தை

அங்கீகரிக்கவும், அவை சகல சமூதாயகங்களுக்கும் சேவைசெய்வதை உறுதிப்படுத்தும் வகையில் கட்டமைப்பு, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதத்தில் கையாளுவதற்கும் இயலாமை அல்லது விருப்பமின்மை என்பவற்றின் காரணமாகவே எழுகின்றன. தீர்வுக்குப்பிந்திய படிநிலையில் புனர்நிர்மாணத்தைப் பற்றிப் பேசுவதன் கருத்து மோதுகையை உருவாக்கிய அதே காரணிகளை மீண்டும் வரவேற்பதுபோன்ற ஒரு கடந்தகாலத்துக்கு திரும்பிச்செல்வது என்பதாகும். தீர்வுக்குப் பிந்திய மோதுகைப் பணி அல்லது உடன் பாட்டுக்குப் பிந்திய பணி என்பது அநேகமாக மிகச்சிறந்த முறையில் பயன்படுவதாக அமையலாம்.

நாங்கள் “மோதுகைக்குப் பிந்திய” என்ற பதத்தையும் பயன்படுத்தக்கூடாது. உண்மையில் மோதுகைகள் முடிவடைவதில்லை, ஆனால், அவை மாற்றமுறுகின்றன. எம்மில் அநேகர் நாடும் மாற்றம் வன்செயல்களிலிருந்து மேலும் சமாதானமான வழிமுறைகள் மூலம் தீர்வு ஏற்படும் அரசியல் ஆகும். இது இறுதியில் குறைவான வன்செயலுக்கும், கூடுதலான ஒத்துழைப்புக்கும், சமூகங்களிடையே கூடுதலான மரியாதையையும், விசுவாசத்தையும் கட்டியெழுப்புவதற்கும் இட்டுச்செல்லக்கூடும்.

“வன்செயலுக்குப்பிந்திய” என்னும் சொற்பதத்தை நீங்கள் பிரயோகிக்கலாம் - ஆனால் வன்செயல்கள் தொடர்ச்சியாக முன்செல்வதே இங்குள்ள பிரச்சினையாகும். நான் இங்கே கூறுவது வன்செயல்கள் ஒரேயடியாக நின்றுவிடுவதில்லை என்பதையும் அவை சிறிது சிறிதாகவே தணிவடைகின்றன என்பதையுமேயாகும்.......... ஆகவே அநேகமாக மிகச்சிறந்த பதம் உடன்பாட்டுக்குப் பிந்திய அல்லது தீர்வுக்குப் பிந்திய பணி என்பதேயாகும்.உதாரணமாக, தீர்வுக்குப்பிந்திய அரசியல், பொருளாதார, மற்றும் சமூகப்பணி

மூலம்: பல்கலைக்கழகம் (அதேநேரத்தில் வடஅயர்லாந்து அல்ஸ்டர் / இன்கோர் பணிப்பாளராகிய)மாரி பிட்ஸ்டவ் உடன் 2003 யூலையில் இடம் பெற்ற நேர்முகம்



எப்படியாயினும் சில மோதுகை வலயங்களின் அனுபவம் புனர்நிர்மாணம் என்பது ஓர் எதிர்மறைப் பதமாக நோக்கப்படவேண்டிய சொற்பதம் அல்ல என்பதையும், அது வன்செயலால் பாதிப்புற்றோருக்கு கடந்தகாலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள் மற்றும் அநீதிகளைத் திருத்தியமைக்கும் ஒரு தார்மீக முயற்சியாக நோக்கப்படலாம். என்பதையும் காட்டுகின்றது. நோர்பேர்ட் ரோப்பர்ஸ் அவர்களும் இலங்கையில் தற்கால அபிவிருத்தி மற்றும் சமாதான நடவடிக்கைகள் குறித்து இவ்வாறே முடிவுசெய்கின்றார் (பெட்டி 2ஐ பார்க்கவும்).

**பெட்டி 2 : இலங்கை நிலைநின்ற நோக்கு**

பல நெருக்கடிப் பிராந்தியங்களில் தற்போது மூன்று R என அழைக்கப்படும் (சில வேளைகளில் மீளிணக்கத்தோடும் இணைப்புற்றது) புனர்நிர்மாணம் மற்றும் ஏனைய “RRR கள்“ என்பவையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. போருக்கு முன்பிருந்த சூழ்நிலைக்கு மீண்டும் செல்வது சாத்தியம் என்று அவை உட்கிடையாகத் தெரிவிப்பதே இதற்கான காரணமாகும். பிரதான விடயம் யாதெனில் முன்பிருந்த சமூகஅரசியல் முறைமையே ஆரம்பத்தில் மோதுகைக்கு இட்டுச்செல்கிறது என்பதாகும். இது பல

மோதுகைப் பிராந்தியங்களில் சந்தேகத்துக்கிடமின்றி உண்மையாக விளங்குகின்றது. ஆயினும் இந்த வாதம் "மீள்" என்னும் பதம் ஒரு வெறும் தொழில்நுட்பக்கண்ணோட்டத்தை விடக் கூடுதலான அர்த்தம் கொண்டது என்பதை உதாசீனம் செய்கின்றது. அது வன்செயலால் பாதிப்புற்றேருக்கு விளைவிக்கப்பட்ட தவறுகள் அழிவு மற்றும் வெளியேற்றம் என்பவற்றை திருத்துவதற்கான ஒரு தார்மீக முயற்சியென்பதையும் குறிக்கின்றது. புனர்நிர்மாணக்கண்ணோட்டத்தைக் கைவிடுவது யுத்தத்தால் பாதிப்புற்ற அனைவருக்குமுள்ள திரும்ப வருவது மீள்குடியேற்றம் மற்றும் இல்லங்கள், ஜீவனோபாயம் என்பவற்றை மீளக்கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான உரிமையை விட்டுக்கொடுக்கும் ஒன்றாகவும் உரை செய்யப்படலாம். இந்த ஒழுக்கநெறிசார் பரிமாணத்தின் காரணமாக "மோதுகைக்குப் பிந்திய புனர்நிர்மாணம்" என்னும் பதத்தை வைத்துக்கொள்வது முக்கியமானதாகும். இது ஆட்புலரீதியில் இழுபறியான மோதுகைகள் இடம்பெறும் பல பிரதேசங்களைப் பொறுத்தவரையிலாயினும் எடுக்கப்படவேண்டிய கண்ணோட்டமாகும்.

மூலம் : கொழும்பு மோதுகைக் கற்கைகள் மற்றும்
நிலைமாற்றத்துக்கான மூலவள வலைப்பின்னலின் பணிப்பாளர் நோர்பேர்ட்
ரோப்பர்ஸ்அவர்களுடன் 2003 யூலையில் இடம்பெற்ற நேர்முகம்

பக் என்பவர் "மீள்உருவாக்கம்" அல்லது "சமாதானமான மீள்உருவாக்கம்" என்பதை ஆலோசனையாக முன்வைக்கின்றார். அவர் மீள் உருவாக்கம் ஒரு சுயநிலைத்தகவு செயல்முறையைக் குறிப்பிடுவதாகவும், புனர்வாழ்வு பாதிப்புற்றோர் அல்லது தவறிழைத்தோர் இயலாமை காரணமாக அல்லது சலுகை மறுக்கப்பட்டமை காரணமாக இவ்விடயங்களை தம்மீது வரவழைத்துக்கொள்வதைக் குறிப்பதாகவும் வாதிடுகிறார். இவர் சமாதானமான மீள் உருவாக்கத்தை "வன்செயலால் அதிகாரம் மறுக்கப்பட்டு, ஏழ்மைநிலைக்கு உட்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள் ஒப்பீட்டளவிலான சமாதான சூழ்நிலையின்கீழ் தமது உடனடி இருப்பை உறுதிசெய்வதற்கும், அப்பால் எதிர்காலக் குறியிலக்குகளையும் முன்னுரிமைப்படுத்த ஆரம்பிக்கக்கூடியவகையில் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சீராக்கல் முறைவழி" என்று வரைவிலக்கணம் செய்கின்றார். மேலும் அவர் சமாதான ஆய்வாளராகிய ஜொகான் கல்துங் (1976) என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டு முன்னாள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூத்திரஸ் காலியினால் புத்துயிரூட்டப்பட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கருப்பொருளுக்கும் ஆதரவு வழங்குகின்றார். தனது சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரலில் அவர் முரண்பாட்டுக்குப் பிந்திய மீளமைப்பு பௌதீகச் சேதங்களையும், அழிவுற்ற அகநிலையமைவுகளையும் வெறுமனே திருத்துவதைவிடப் பெரிதும் அதிகமானது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் மீண்டும் மோதுகைக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் சமாதானத்தை வலுப்படுத்தி காத்திரமாக்குவதற்கும், மற்றும் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கைமற்றும் நன்னிலை உணர்வை முன்னேற்றுவதற்கும் கூட்டுநடவடிக்கைகள் அவசியமென்று கூறுகின்றார் (பூத்திரஸ் காலி 1992 ப 2). இவ்வாறாக பக் கூறுவதைத் தொடர்ந்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை "வன்செயல் மோதுகைக்கு மீண்டும் செல்வதைத் தடுக்கும் நோக்கத்தில் கட்டமைப்புகளையும், முறைவழிகளையும் வலுப்படுத்தும் நோக்கத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்" என்று வரைவிலக்கணப்படுத்தலாம். இந்தவகையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதும், மீளுருவாக்கமும் நிவாரணம் மற்றும் அபிவிருத்தியை பரஸ்பரம் ஊடறுத்துச்செல்வதோடு, அவற்றோடு இணைந்தும் செல்கின்றன. இக்கருத்து பரந்த அளவில் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. (மத்தீஸ் 2000 ப 105 மீயால் ரம்ஸ்பொதாம் மற்றும் வூட்ஹவுஸ் 1999 என்போரைப் பார்க்கவும்).

கல்விமான்கள் மற்றும் நடைமுறைப்படுத்துநரிடையே இப்பதங்கள் குறித்த பல்வேறு அபிப்பிராயங்கள் காணப்படினும், யுத்தத்தினால் சீரழிந்த சமூகத்தில் அடிப்படையான மாற்றுநிலையாக்கம் அவசியம் என்பதில் பரந்த கருத்தொருமை இருப்பதாகத் தோன்றுகிறது. அரசியல், சமூக உளவியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்கு தீர்வுகண்டு, ஆயுதமோதல்களின் விளைவுகளுக்குப் பரிகாரம் காணுவதன்மூலமே மீண்டும் வன்செயல் ஏற்படுவதைத்தடுத்து, நிலையான சமாதானத்தை ஏற்படுத்தமுடியும். இதன் கருத்து பல்வேறுவிதமான பணிகள் ஆற்றப்படவேண்டும் மற்றும் பல்பரிமாண அணுகுமுறைகள் அவசியம் என்பதேயாகும்.

## 1. பல்பரிமாண அணுகுமுறைகள்

பல நூலாசிரியர்கள் யுத்தம் வெடிப்பதற்குப் பகுதிநிலைக் காரணிகளாக இருந்த நலன்மோதல்களுக்குத்தீர்வு காண்பதற்கு அரசியல் புத்தாக்கம் மிகவும் முக்கியமான முன்நிபந்தனை என்பதை இனங்கண்டுள்ளனர். இதைச்செய்வதற்கு சட்டரீதியான நிச்சயத்தன்மையையும், ஜனநாயகப்பங்கேற்பையும் (நல்லாட்சிமுறை) பாதுகாத்து, மனிதஉரிமைமீறல்களை விசாரணை செய்து, வன்செயல் கட்டமைப்புக்களை இல்லாதொழிக்க சீர்திருத்த நடவடிக்கை எடுக்கும் மற்றும் / அல்லது உதவிவழங்கும் பொது மற்றும் சட்டநிறுவனங்களை உருவாக்குவது அவசியமாகும். அரசியல் கட்டமைப்புகள் பூரணமாக அழிவடைந்தால் அவசியமான இடைமாற்றக்காலப்பகுதியில் அவற்றின் இடத்தை சர்வதேச அமைப்புகள் நிரப்பலாம் அல்லது கட்டாயம் நிரப்புதல் வேண்டும். வீடமைப்பு அகநிலையமைவு மற்றும் சுகாதாரமுறைமைகளின் பௌதீக நிர்மாணத்திற்கு மேலதிகமாக, சமூகப் புத்தாக்கம் பிரதானமாக சிவில் சமூகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதிலும், முன்னாள் போராளிகள் சமூக மீளிணைப்புப் பெறுவதை முன்னேற்றுவதிலும், அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் திரும்பி வருவதிலுமே கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றது.



இச்சூழமைவில் உளவியல் சமூக அல்லது உளவியல் பரிமாணத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. (மியால், ரம்ஸ்பொதாம் மற்றும் வூட்ஹவுஸ், ப.203). இவை மன அதிர்ச்சி வடுவுக்குத் தீர்வுகாண தனிநபர் மற்றும் குழுக்களிடையிலான மட்டத்தில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் அடையாளம் சம்பந்தமான பிரச்சினைகளில் பணியாற்றுதல் என்பவற்றை உள்ளடக்குவதாகும். இச்சூழமைவில் கடந்தகாலத்தைக் கையாளும் வழியும் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இதனால் வன்செயல் மற்றும் வெளியேற்றுதல் என்பவற்றால் பாதிப்புற்றோர் அகவயரீதியில் சேமநிலையை உணர்வதற்கும், வன்செயலாளர்கள் இறுதியில் நீதிக்குமுன் நிறுத்தப்படுவதற்கும் வழி ஏற்படும் (குன்னர் தீசென் இப்பாகத்துக்கு வழங்கிய பங்களிப்பைப் பார்க்கவும்.)

அகநிலையமைவு மீளுருவாக்கம் மற்றும் விவசாயத்தில் புனர்வாழ்வுக்கு மேலதிகமாக (போக்குவரத்து, தொடர்பாடல்கள், நீர் மற்றும் மின்சாரம்) பொருளாதாரப்புத்தாக்கம் என்பது பிரதானமாக யுத்தப் பொருளாதாரத்தை இல்லாமல் செய்வதிலும், கொள்ளையடிக்கும் பொருளாதாரத்தை ஒரு சமாதானப் பொருளாதாரமாக நிலைமாற்றம் செய்வதிலும் (கரிட்டாஸ் 2000, பி 86) கட்டாயம் கவனத்தை ஒருமுகப்படுத்தல் வேண்டும். பேரியல்புப் பொருளாதார அபிவிருத்தியும், வேலைகள் உருவாக்கமும் அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் சேவைகள் வளங்கலை மாத்திரமன்றி உளச்சமூகவியல் ஸ்திரநிலையை பாதுகாப்பதற்கும் அவசியமான முன்நிபந்தனைகளாகும். ஆயினும், வளமையாக யுத்தத்துக்குப்பிந்திய சமூகங்கள் யுத்தப்பொருளாதாரக் கட்டமைப்புகள் அல்லது மரபுரிமைகளால் (உதாரணமாக, கறுப்புச்சந்தைகளும், மாபியா கட்டமைப்புக்களும்) தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தப்படுகின்றன. இவை பகை நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர் நீண்டகாலம் நிலவக்கூடும். இந்த நிலைமைகள் பாரதூரமான முதலீட்டாளர்களுக்கு உண்மையான தடையாக அமையக் கூடுமாகையால் ஒரு நச்சுவட்டம் பரிணமிக்கின்றது. போல்கன்ஸ் அல்ல காகஸஸ் போன்ற பல மோதுகைக்குப் பிந்திய

பிராந்தியங்கள் ஒரு மேலதிகப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. யுத்தத்தின் தாக்கங்களைப்போன்று திட்டமிட்ட சோஷலிச பொருளாதாரத்தின்கீழான மோசமான முகாமைத்துவத்தின் விளைவுகளுக்கும் தீர்வுகள் காணப்படுதல் வேண்டும். ஆகவே மோதுகைக்குப் பிந்திய மீளாக்கத்தின் ஒரு முக்கியமான குறிக்கோள் ஒரு யுத்தப் பொருளாதாரத்தை இல்லாமல் செய்வது மாத்திரமன்றி, கைத்தொழில் ஓரினக்கலாசார மற்றும் மத்திய திட்டமிடல் அதிகாரத்துவவாதம் மற்றும் வியாபாரத்தொழில் துறைத்தேர்ச்சியின்மை என்பவற்றையும் இல்லாதொழிப்பதாகும் (கரிட்டாஸ், ப 87).

மேலும், ஒரு முக்கிய வினா வன்செயல் கலாசாரங்களை வெற்றிகொள்ளும் வழியில் பங்களிப்புச் செய்யும் வகையில் மீளமைப்பு முன்முயற்சிகளை வடிவமைப்பது எவ்வாறு என்பதாகும். முன்னாள் யுத்தத்தரப்பினர்கள் ஒரு சமாதான உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தபோதிலும், சிவில் வன் செயலை ஏற்படுத்தும் அதிகாரம், நலன் அல்லது அடையாளம் குறித்த பிரச்சினைகள் மறைந்துவிடுவதில்லை. நடைமுறையில் சமூகத்தில் கீழ் மட்டங்களில் வன்செயல் தொடர்ந்தும் நிலவி, சில குறிப்பிட்ட பிராந்தியங்களில் தணிவடையாது தொடரக்கூடும் அல்லது இடையிடையே வெடிக்கக்கூடும். இழுபறியான வன்செயல் மோதுகைகளின்போது தொடர்ந்து நிலவும் யுத்தக்கூட்டணிகள் இந்த நிலைமைகளைத்தொடரும் அக்கறையுடன் கட்டமைப்புக்களை உருவாக்குவது வழமையாக இடம்பெறுவதாகும் (ரோப்பேர்ஸ் 2000). அவற்றுள் ஆயுதப்படைகள், பாதுகாப்புச்சேவைகளின் பிரிவுகள், ஆயுதவியாபாரிகள், நிலச்சொந்தக்காரர்கள், மூலதனம், அரசியல் சலுகைகள், குழுக்கள் மற்றும் சட்ட விரோதமான வியாபாரத் தொழில்களில் ஈடுபடுவதற்காக அழிவடைந்த கட்டமைப்புகளைச் சாதூரியமாகப் பயன்படுத்தக்கூடிய தனிநபர்கள் என்போரே உள்ளடங்குகின்றனர் (பொ்டால் மற்றும் மலோனி 2000). இதனால் சமுதாயங்களுக்கிடையிலான வன் செயல் மற்றும் பகை உணர்வுக் கலாசாரம் பரிணமிக்கின்றது.

ஆகவே, வெளியக உதவியின் குறியிலக்கு பாதிப்புற்ற சிவிலியன்களின் அவசரத் தேவைகளுக்குத் தீர்வுகாணும் அதேவேளையில், மோதுகைகள் அகிம்சைவழியில் வெளிப்படுத்தப்படவும், முகாமைத்துவம் செய்யப்படவும் தீர்க்கப்படவும் கூடியவகையில் ஊக்குவிப்புக்களை வளங்கும் உதவிப்பொதிகளை வடிவமைப்பதாக இருத்தல் வேண்டும் (போர்மன், பட்ரிக் மற்றும் சொலமன்ஸ் 2000, ப.14).



**பெட்டி 3 : யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கான மாற்றுநிலையாக்கம் குறித்த பிரதான பணிகள்.**

- வன் செயல் கலாசாரங்களின் மாற்றுநிலையாக்கம்;
- ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகத்தின் அபிவிருத்தி என்பவற்றுக்கான மதிப்பு உள்ளிட்ட நல்லாட்சிப்பாரம்பரியத்தை ஏற்படுத்தல்.
- உள சமூகவியல் காரியங்களை ஆற்றுவதும், நீண்டகால மீளிணக்கப்பாடு கூட்டுறவு மற்றும் ஒப்புரவான பிராந்திய மற்றும் உலகளாவிய கட்டமைப்புகளோடு ஒன்றிணைவு.
- நிலையான நீண்டகால பேரியல்பு பொருளாதாரக்கொள்கை, பொருளாதார முகாமைத்துவ மற்றும் உள்;ரில் நிலைபேறான ஜன சமூக அபிவிருத்தி.

(மூலம் :மியால், ரம்ஸ்பொதாம் வூட்ஹவுஸ் 1999,ப, 203)

பல கல்விமான்கள், யுத்தத்தின் முடிவு நாட்டை கட்டியெழுப்புதல் மற்றும் புதிய இடர்வரவுகள் சம்பந்தமான ஒரு காலப்பகுதியைக் குறிப்பதாயின், வன்செயல் மோதுகையிலிருந்து மீளுருவாக்கலும், நிலையான சம்பந்தத்தை ஏற்படுத்துதலும் ஒரு நீண்ட நடவடிக்கைமுறை என்றும் மேலும் நாட்டை கட்டியெழுப்புவதும், இடர்களை எதிர்கொள்வதும் சிக்கலானதும் நீண்டதென்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்

(போர்தீஸ் 2000, ப. 52, பெர்தௌசி மற்றும் மத்தீஸ் 2003 ப. 322). ஐந்து கண்டங்களிலிருந்து வரும் பல்வேறு மீளுருவாக்கல் செயல்முறைகள் குறித்த விடய ஆய்வுகளின் அடிப்படையில் (பொஸ்னியா, வட அயர்லாந்து, லெபனான், இஸ்ரேல், பலஸ்தீனம், வியட்நாம், கம்போடியா, போகேயின்வில், சொலமன் தீவுகள், சோமாலியா, அங்கோலா, மொசாம்பிக், நிக்காரகுவா, எல்சல்வடோர், கௌதமாலா) பெர்தௌசி மற்றும் மத்தீஸ் என்போர் (2003) இச்செயல்கள் அனைத்துமே பொதுவான சில அம்சங்களைக் கொண்டுள்ளனவென்று முடிவுசெய்கின்றனர்.

இந்த உதாரணங்கள் அனைத்திலும் இராணுவம் சிவில் அதிகாரிகளுக்கும், ஜனநாயக அரசியலமைப்பு அம்சங்களுக்கும் கீழ்ப்பட்டிருப்பது உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. ஆயினும், சமூகநீதிகுறித்த நடுநாயகமான வினாக்களுக்குத் தீர்வுகாணப்படவில்லை. பிரட்தியட்சமாகவே சமாதான உடன்படிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் பேச்சுவார்த்தை முறைவழியின் ஒரு முக்கிய பிரச்சினையாக சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவில்லை. இவற்றுக்குப்பதிலாக, ஏனைய பிரச்சினைகள்மீதே உடனடிக்கவனம் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்தல் மற்றும் கடந்த காலத்தை ஆக்கபூர்வமாகக்கையாளும் முன்முயற்சிகள்போன்ற சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் இதுவரையில் அபிவிருத்திசெய்யப்படவில்லை. எந்த விடயநிகழ்வுகளிலும் அரசுநிர்வாகத்தை கட்டுப்படுத்தி உண்மையான அதிகாரப்பிரிவினை உத்தரவாதப்படுத்தக்கூடிய செய்பரப்பு நியாயாதிக்கம் நிறுவப்படவில்லை.

இத்தேடல் முடிவுகள் இருந்தபோதிலும், லெபனான், சோமாலிலாந்து, போகெயின்வீல் மற்றும் மொசாம்பிக் எனும் நான்கு விடயநிகழ்வுகள் (ஒப்பீட்டளவில்) வெற்றிகுறித்த உதாரணங்களாகக் கருதப்படுகின்றன. ஆய்வு செய்யப்பட்ட ஏனைய விடயநிகழ்வுகளிலான அபிவிருத்தி சோமாலியா, அங்கோலா, பலஸ்தீனம், மற்றும் சொலமன் தீவுகளில் இடம்பெற்றது போன்று ஒன்றில் தோல்வியாக இருந்தன அல்லது மிகவும் பிரச்சினைக்குரியதாக கருதப்பட்டன.



இவ்விடயநிகழ்வுகளில் கிடைத்த படிப்பினைகளின் அடிப்படையில் பெர்தௌசி மற்றும் மத்தீஸ் (அதே இடம்) மீளமைப்பு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயல்முறைகளில் ஆக்கபூர்வமான விளைவுகளுக்கு அவசியமான பொதுநிபந்தனைகளைச் சாராம்சப்படுத்துகின்றனர்:

- இயைபுற்ற அனைத்து பாத்தியதை உடையோரையும், விசேடமாகப் போட்டியிடும் மேல்மக்களையும் “உள்ளடக்கும்” கோட்பாடு.

- பாதுகாப்பு இக்கட்டு நிலைமைக்குத் தீர்வு ஆயுதப்படை, பொலிசைக் குறைத்து சீர்திருத்துதல், அவற்றின் கட்டுப்பாட்டை உத்தரவாதம் செய்தல், அரச ஏகபோக பாதுகாப்பை நிலைநாட்டுதல்.

- அரசினதும் சமூகத்தினதும் சகல மட்டங்களுக்கும் “மேலிருந்து கீழ்” செயல்முறையை விஸ்தரித்து அதைக்கீழிருந்து மேலான உத்தியாக இணைத்தல். சமூகத்தினரிடையே சமாதானச் செயல்முறையை முன்னேற்றுவதற்கு சிவில் சமூகத்தின் ஆதரவு ஒரு முக்கியமான முன்நிபந்தனையாகும்.

- யுத்தத்தால் பாதிப்புற்றோரின் போஷாக்கு, சுகாதாரம், கல்வி என்பவற்றை உத்தரவாதப்படுத்துவதன் மூலம் மீள் ஒருங்கிணைத்தல் ஊடாக சமாதான முறைவழிக்கு ஒரு சமூக பொருளாதார அடிப்படையை ஏற்படுத்துதல். உள்ளூர்ச் சமுதாய வலைப்பின்னல் அமைப்புக்களின் நம்பிக்கையைக்கட்டியெழுப்புதல் மற்றும் யுத்தத்தால் சீரழிந்த சமூகத்தில்

மனித மூலதனத்தில் முதலீடுகள் செய்வதன்மூலம் யுத்தப்பொருளாதாரங்களைச் சமாதானப் பொருளாதாரங்களாக நிலைமாற்றம் செய்தல்.

- யுத்தத்தால் சீரழிந்த சமூகத்தின் வரலாறு மற்றும் கலாசாரத்துடன் இணைப்புற்றகோட்பாடுகள், நியமங்கள் மற்றும் நிறுவனங்கள் இணக்கத்துக்குப் பயனுள்ளவை என்றால் அவற்றுக்கு மதிப்பளித்தல்.

வெளிவாரி செயற்பாட்டாளர்களின் முயற்சிகள் இம் மூலக்கோள்களைக் கவனத்தில் கொள்ளுதல்வேண்டும். மேலும் அவர்கள் கட்டமைப்பு மாற்றங்களுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக்கொண்ட நீண்டகால ஈடுபாட்டுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்.

## 3. வெற்றிகரமான மீளுயிர்ப்பூட்டலுக்கும் சமாதான கட்டியெழுப்புகைக்கும் வேண்டிய கட்டமைப்புக்கான முன்நிபந்தனைகள்

வன்செயல் மோதுகைகளிலிருந்து மீழும் சமூகங்களின் நிலைபேறான சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஈட்டிக்கொள்வதற்கான தளத்தை தயார் செய்வதற்கு பல அம்சங்களும், தேவைகளும் ஆரம்பத்திலிருந்து கருத்தில்கொள்ளப்படவேண்டும். அவை பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன:

1. திருப்பியனுப்புவதும், மீள்குடியேற்றமும்
2. பொதுமக்கள் பாதுகாப்பு
3. அகநிலையமைவு மீளமைப்பு
4. உணவுப்பாதுகாப்பும், விவசாயத்தின் புனர்வாழ்வும்
5. சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலனோம்புகைத்தேவைகள்
6. ஆட்சிமுறை, சிவில்சமூகம் மற்றும்
7. பேரியல்புப் பொருளாதார ஸ்திரநிலைப்படுத்தல்

மோதுகையின் பல்வேறு கட்டங்களில் இந்த நடவடிக்கைகளைப் பிரயோகிக்கலாம். இதை ஒரு வார்ப்புருக் கட்டுகோப்பினால் தெளிவுபடுத்தி, நான்கு படிநிலைகளை வேறுபடுத்தி அறியலாம். அவையாவன, நெருக்கடி, நெருக்கடிக்குப்பிந்திய நிலை (தீர்வுக்கு முன்னர்) தீர்வுக்குப்பிந்திய நிலை மற்றும் நீண்டகால புனர்நிர்மாணம் (உரு 1 ஐ பார்க்கவும்) ஆகியவை ஆகும்.

இந்த வார்ப்புருச் சட்டத்தின்பிரகாரம் அநேகமான நடவடிக்கைகள் நெருக்கடிக்குப்பிந்திய நிகழ்வுக் காட்சியிலேயே ஆரம்பிக்கின்றன. ஆயினும், மனித உரிமைகள் கண்காணிப்பு, உணவு விநியோகம் மற்றும் நீர், அத்தியாவசிய சுகாதாரசேவைகள் என்பவை “தீவிர” மோதுகை என அழைக்கப்படும் ஒரு கட்டத்தின்போது இடம்பெறலாம். சிலநடவடிக்கைகளை தீர்வுக்கு முன்பு ஆரம்பிக்கலாம் (திரும்பி வருவதற்கான போக்குவரத்து உதவி, வீடு, உளவியல் சமூக ஆலோசனை சேவை, குடும்பங்களைத்தேடிக்கண்டுபிடித்தல், கண்ணிவெடி அகற்றலும், விழிப்புணர்வும், மோதுகைத் தீர்வு பயிற்சி, போக்குவரத்து முறைமையை மீளமைத்தல் , சக்தி பிறப்பாக்கம், கழிவுப்பொருட்கள் அகற்றல், தொடர்பாடல்கள், விதைகள் மற்றும் கைக்கருவிகள் விநியோகம், கால்நடைச் செய்திட்டங்கள், வைத்திய வசதிகள் புனர்நிர்மாணம், வேலைவாய்ப்புகள், மற்றும் திறன்கள் பயிற்சி) ஏனைய சகல நடவடிக்கைகளுக்கும் ஒரு தீர்வு முதலில் அவசியமாகும், அவற்றுள் சிவில் சேவையை சீரமைத்தல், நிர்வாகம் மற்றும் நீதி முறைமையைச் சீரமைத்தல், இத்துறைகளைக் கண்காணித்தல் மற்றும் நிதி நிறுவனங்களை மீளமைப்பதற்கான முன்முயற்சிகள் போன்றவை

நீண்டகாலச் செய்திட்டங்களாக கருதப்படுகின்றன. இது மனிதத்தேவைகளை நிறைவேற்றும் (நிவாரணம்) குறுகியகால நடவடிக்கைகளுக்கான ஒரு தொகுதிப்பணிகளையும், நீண்டகால சமூகப்பொருளாதார மற்றும் அரசியல் புத்தாக்கத்துக்கான (அபிவிருத்தி) முன்முயற்சிகளையும் தேவைப்படுத்துகின்றது.

இடைமாற்றக் காலகட்ட நிச்சயமற்ற பாதுகாப்பு சூழலினுள் ஒரு தொகுதி சமூக,பொருளாதார, அரசியல் மற்றும் உளவியல் சவால்கள் காரணமாக சிக்கலடைகிறது. வித்தியாசமான அணுகுமுறைகள், நிறுவன ஏற்பாடுகள் மற்றும் பல்வேறு செயற்பாட்டாளர்களின் நிதியளிப்பு முறைமைகள் காரணமாக இச்சவால்களுக்கான தற்போதைய பதிற்குறிகள் போதாதவையாகக் கருதப்படுகின்றன. உலக வங்கியால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை (கொலட்டா மற்றும் கலென் 2000, ப.120) பின்வருமாறு தெரிவிக்கின்றது :

> *மனிதாபிமான உதவி என்பது அநேகமான சந்தர்ப்பங்களில் நிலைபேறற்ற ஒன்றாக உள்ளதுடன், கொடைவழங்குநர்களும் இடைமாற்றக் காலகட்டத்தில் அக்கறைகாட்டாத நிலைமையே பெரிதும் காணப்படுகிறது. மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி என்னும் எதேச்சையான தனிக்கூறுகள், சமாதானத்தின் நொய்தான தன்மை மற்றும் வன்செயல்களின் நீடிப்பு மோதுகை மற்றும் மோதுகைக்குப்பிந்திய காலப்பகுதிகள் இடையே வேறுபாடுகளைக் காண்பதைக் கடினமாக்குகின்ற நிலையில் யதார்த்த உலக சமூகங்களோடு ஒன்றிச்செல்வதில்லை. மனிதாபிமானச் செயற்பாடுகள் விரைவான பதிற்குறிகளிலும், குறுந்தவணை திட்டமிடலிலுமே கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றது. அதேவேளையில் அபிவிருத்தி முகவர்நிலயங்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் மெதுவாகவும், நெகிழ்ச்சியற்ற முறையிலுமே செயற்படுகின்றன. இரண்டுமே யுத்தத்தால் பாதிப்புற்றோரின் தேவைகளைவிட பணிப்பாணைகள்மீதே கூடுதலான கவனம்செலுத்த முனைவதுடன், இரண்டுமே செயற்பாடுகளை மேம்பாடடைய உதவக்கூடிய ஏனையோரின் அறிவு மற்றும் துறைத்தேர்ச்சியில் தங்கியிருப்பதாகத் தெரியவில்லை.*



இந்த இடைவெளியை நிரப்புவதற்கு பல்தரப்பு மற்றும் இருதரப்பு நிறுவனங்கள் தமது உபாயங்களிலும், செயற்பாடுகளிலும் மேலும் இணைப்பு மற்றும் கூட்டிணைப்பை ஏற்படுத்துவது எவ்வாறு என்பதே கேள்வியாகும்.

## 3.1 கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பு ரீதியான முன் நிபந்தனைகள்.

1990 களின் ஆரம்பம்வரை அபிவிருத்தியும், நிவாரணமும் பெருமளவுக்குத் தனியான செய்பொருள் மற்றும் நிறுவனத்துறையிலேயே செயலாற்றின. அதிகமாகப்பார்த்தால் அவற்றை ஒரு கால ஒழுங்கு வரிசை முறைவழியில் இணைக்கும் முயற்சிகள் அதாவது ஒரு நிவாரணம் - புனர்நிர்மாணம், அபிவிருத்தி ஆகியவற்றை தொடர்நிலையாக இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாதிரியின் பிரகாரம் மோதுகை அதிகரிப்புக்காலப்பகுதியில் அபிவிருத்தி நின்றுவிடுவதுடன் அதனிடத்தே நிவாரணமும் - போர்நிறுத்தம் ஏற்பட்டவுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகிறது. இறுதிக்கட்டத்திலேயே அது மீண்டும் செயற்படுகிறது. இந்த நடவடிக்கைகளைப் பல்வேறு நிவாரண முகவர் நிலயங்கள் அல்லது ஒரு மோதுகையின்போது தனிப்பட்ட அமைப்புகளிலுள்ள தனித்தனியான துறைகள் பொறுப்பேற்கின்றன. நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுக் கட்டங்களின்போது பல சர்வதேச நிறுவனங்கள் சுயமாகச்

செயற்படுவது இக்கருமப்பாட்டு வேறுபாடுகளிலுள்ள ஒரு பிரச்சினையாகும். அதேவேளையில் அபிவிருத்தி மேலும் வலுவான முறையில் பங்குடமை மீது கவனம் செலுத்துகின்றது. (கரிட்டாஸ் 2000, ப.82).

ஐ. நா செயலாளர் நாயகம் பூட்ரஸ் காலி (1995) சமாதானத்தை வலுப்படுத்துவதுகுறித்த தேவைகள் சம்பந்தமான கருத்துக்களில் அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரல்குறித்துப் பேசுகையில் சமாதான காலத்தைவிட நெருக்கடிக்குப்பிந்திய சூழ்நிலைகளில் வித்தியாசமான அபிவிருத்தி உபாயங்கள் தேவைப்படுவதைச் சுட்டிக்காட்டினார். இந்த உபாயங்கள் “மோதுகைக்குப்பிந்திய தயார்நிலை” என்னும் அர்த்தத்தில், பகை நடவடிக்கைகள் நிறுத்தத்துக்கும் முன்பே வகுத்தமைக்கப்படவேண்டுமென்று அவர் வாதித்தார். மேலும், நிவாரணமும் அபிவிருத்தியும் மாற்றீடுகளாக நோக்கப்படலாகாது. நீயுயோர்க் பல்கலைக்கழகத்தின் சர்வதேச கூட்டுறவுக்கான நிலையத்தால் (CIC) நடாத்தப்பட்ட விடய ஆய்வுகளின் தேடல்முடிவுகள் இதேவிடயத்தை தெரிவிப்பதுடன்,நிவாரணம் மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி உதவியை இணைக்கும் ஓர் எளிமையான “தொடர்நிலை” கிடையாதென்றும் தெளிவுபடுத்துகின்றன. மாறாக, இச்செயற்பாட்டுத்துறைகள் நெருக்கடி சூழல்களில் தற்காலிகமாகவும் அவகாச வாய்ப்பிலும் மேற்கவிவாகவுள்ளன. (போர்மன் பட்ரிக்ஸ் மற்றும் சலோமன்ஸ் 2000, ப 23).

பெரும் எண்ணிக்கையிலான சர்வதேச நிவாரண முகவர் நிலையங்களும், அபிவிருத்தி அமைப்புக்களும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. அவை இத்துறைகளின் இடையிலான கருப்பொருள், கால ஒழுங்கு வரிசை மற்றும் துறைரீதியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கருமப்பாட்டு வேறுபாடுகளுக்கு சவால் விடுவதுடன், வன்செயல் சிவில் மோதுகையின் சகல கட்டங்களிலும் ஒரு பல்துறை அணுகுமுறை அவசியம் என்று முடிவுசெய்துள்ளன. ஆகவே 1990கள் காலப்பகுதி முழுவதும் தொடர்நிலை மாதிரி நிலையாக “அருகாமை” அணுகுமுறையை உள்ளடக்கும் விதத்தில் விஸ்தரிக்கப்பட்டது. நிவாரணம் மற்றும் அபிவிருத்தி என்னும் இரு அம்சங்களும் கூட்டிணைக்கப்பட்டன. ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மாதிரிக்கு சாதகமானமுறையில் அவற்றைப்பிரிக்கும் ஒரு கால ஒழுங்குவரிசைக்கட்டங்கள் கைவிடப்பட்டன. இவ்வாறான நிவாரணப்பணி ஆரம்பத்திலிருந்தே மோதுகைக்காலம் முழுவதும் உரிய இடத்தில் அமைவுறும் ஒரு நெடுந்தவணை, அபிவிருத்தித்திசைமார்க்கம் கொண்ட ஒரு பூரணமான அணுகுமுறையில் இடம்பெறுகின்றது (OECD/ DAC 1998,ப.48.ஐப் பார்க்கவும்)

சில அபிவிருத்தி முகவர்நிலையங்கள் இந்த அணுகுமுறையை ஏற்றுச் செயற்படுகின்றன. உதாரணமாக 1990 களின் இறுதிப்பகுதிகளில் The Deytsche Gesellschaft fur technische zusannenarrbeit (GTZ), “அபிவிருத்தி திசை மார்க்கம் கொண்ட” நிவாரணம் என்னும் கருப்பொருளை விரித்துரைத்தது. இது நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு மூலமாக- உள்ளூர் மட்டங்களில் சமூக கட்டமைப்புகளைத் தாபித்து, நெருக்கடியிலிருந்து நீண்டகால அபிவிருத்திக்கான இடைமாற்றத்தை இலகுபடுத்துவதற்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும் (GTZ 1998).

உலகவங்கி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் (UNHCR) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) என்பவை, சமீபத்தில் குறுந்தவணை மனிதநேய உதவிக்கும், நெடுந்தவணை அபிவிருத்தி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இடையீடுகளுக்குமிடையிலான தொடர்பின்மைக்கு தீர்வுகாண்பதற்காக ஒரு தொகுதி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

உரு2 மனிதநேய மற்றும் மனிதநேய முகவர் நிலையங்களுக்கிடையே சாத்தியமான கூட்டுறவு சக்தி மற்றும் பங்குடமை என்பவற்றை விளக்குவதுடன், சமூக மூலதனத்தையும் மற்றும் இயைபுள்ள மனிதநேய உதவியையும் இணைத்தல் மோதுகை மரபுரிமைக்கு தீர்வுகாண்பதற்கு எவ்வாறு உதவக்கூடும் என்பதையும் காட்டுகின்றது (இடம் பெயர்வு, பஞ்சம், நோய் மற்றும் மரணம்). அதேவேளையில் சமூக மூலதனத்தை இணைப்பதற்கு ஆதரவுவழங்கும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மோதுகைக்கான காரணங்களுக்கு பரிகாரம் காண்கிறது (ஒப்புரவின்மை, வெளியேற்றல் , மற்றும் கௌரவம்). இக்கருப்பொருளின் பிரகாரம் மற்றும் மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிலயங்களுக்கான முக்கியபணி சமுதாயங்களினுள் சமூக மூலதனத்தை இணைப்பதுவும் (கிடைநிலை மற்றும் நிலைக்குத்து, மற்றும் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது அரசுக்கும், சிவில் சமூகத்துக்குமிடையே இணைப்புக்களை ஏற்படுத்துவதுமாகும்.

இதேவேளை பெரும் எண்ணிக்கையிலான நிவாரண அமைப்புக்கள் சமாதானத்தை கட்டியெழுப்புவதை ஒரு கூட்டு நிவாரண மற்றும் அபிவிருத்திப்பணியாகக் கருதமுற்பட்டுள்ளபோது தமது பணியினுள் மோதுகை நிலைமாற்றத்தையும்,சமாதானத்தைக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் ஒன்றிணைக்க ஆரம்பித்துள்ளன. கரிட்டாஸ், சுவிஸ், (2000, ப.79) “சமாதானத்தை வலுப்படுத்துவதற்கான அபிவிருத்தி உபாயங்கள் குறித்த உள்மையக மூலக்கோள்கள்” சிலவற்றை வகுத்தமைத்து, ஜனநாயக மயப்படுத்தல், மனித உரிமைகள் கண்காணிப்பு, தமது பணியில் சமாதானக்கல்வி குறித்த செய்திட்டங்கள் மற்றும் அம்சங்களை சேர்த்துக்கொள்ளுதல் அல்லது சமாதானக்கூட்டணிகளை உருவாக்குவதன்மூலம் அமைப்புக்களும், அவற்றின் உள்ளூர் பங்காளர்களும் பல்சுவட்டு இராஜதந்திரத்தில் முக்கியமான முகவர் நிலயங்களாக மாறமுடியுமென்று தெரிவிக்கின்றனர். மோதுகையின் கட்டமைப்புக் காரணங்கள் குறித்து பணியாற்றுவதற்கப்பால், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சமூக உறவுகளைப் புத்தாக்கம்செய்து, உரையாடலை முன்னேற்றி, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முறைவழி திசைமார்க்கம் கொண்ட நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.



## 3.2 நிதியளிப்பு நடவடிக்கை முறைகளைக் கூட்டிணைத்தல்

CIC அமைப்பைச்சேர்ந்த கல்விமான்கள், இருதரப்பு செயற்பாட்டாளர்கள் ஆகியோராலும் அத்துடன் பல்தரப்பு நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள் என்பனவற்றாலும் அ.சா.நிறுவனங்களின் முயற்சிகளை கூட்டிணைப்புச் செய்வதற்கான அனைத்தையும் தழுவும் கட்டுக்கோப்பு ஒன்றுக்கான அவசரத்தேவை உணரப்படுகிறது. (போர்மன், பட்ரிக் மற்றும் சலோமன்ஸ் 2000, ப.34). மேலும், சர்வதேச சமூகம் 1990களில் 36 நாடுகளுக்கு மோதுகையிலிருந்து மீளுவதற்காக வாக்குறுதியளித்த கோடிக்கணக்கான டொலர்கள் பணத்தில் ஒரு பகுதி மாத்திரமே அந்த நோக்கத்துக்கு பங்களிப்புச் செய்ததென்பதன் அடிப்படையில் அவர்கள் நிதியளிப்பு முறைமையில் ஒரு சீர்திருத்தத்தைக் கோருகின்றனர். வாக்களித்த மூலவளங்களின் ஒரு பெரும் வீதாசாரம் ஒன்றில் வந்துசேரவில்லை அல்லது மிக மெதுவாகவே வந்துசேர்ந்தது.

1998 ஏப்ரல் மாதத்தில் பாரிஸில் உலக வங்கியால் கூட்டப்பட்ட பல்தரப்பு மற்றும் இருதரப்பு அமைப்புக்களின் மோதுகைக்குப்பிந்திய மாற்றுநிலையாக்க விடய மற்றும் அவசரகால அலகுகளை ஒன்றிணைத்து மோதுகைத்தடுப்பு மற்றும் மோதுகைக்குப்பிந்திய புனர்நிர்மாண வலையமைப்புக்கான நிறுவனம் (CPR) தாபிக்கப்பட்டது. இந்த வழிகாட்டல் முறையற்ற அரங்கு DAC வழிகாட்டல்களுக்கிணங்க, மோதுகைத்தடுப்பு மற்றும் மோதுகைக்குப்பிந்திய புனர்நிர்மாண வேலைகளின் செயற்பட்டு பயனுறுதியை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்ட 29 அமைப்புக்களை ஒன்றிணைக்கின்றது.

ஆயினும், ஐ.நா அமைப்பு முறையிலும் கூட்டிணைப்பின்மை இன்னமும் நிலவுவதாகவே தோன்றுகிறது. வரவு செலவு, நிறுவன மற்றும் நிறுவன செயற்பாட்டுப்பிரிவுகள் இடையீடுகளை திட்டமிடுவதிலும், வளங்களை அணிதிரட்டுவதிலும், செய்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மனிதநேய மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டாளர்களிடையே ஒத்துழைப்பை மட்டுப்படுத்துகின்றன. பல அமைப்புகளிலும் நிவாரண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல்வேறு திணைங்களங்களால் வடிவமைக்கப்படுவதோடு தனி வேறான வரவு செலவுத் திட்டங்களினூடாக நிதியளிக்கப்படுகின்றன. அத்தோடு போர்மன், பெட்ரிக் மற்றும் சலோமன்ஸ் (2000, பக்54) கூறுவதுபோன்று உதவி முகவர் நிலையங்களிலும் காணப்படும் ஊக்குவிப்பு கட்டமைப்புகள் பொதுவாக பொருத்தமான உதவியை வடிவமைப்பதைவிட பணத்தை வழங்கும் இயலுமைக்கே வெகுமதியளிக்கின்றன. இதன் விளைவாக மோதுகைகளிலிருந்து விடுபடும் சமூகங்கள் பொருத்தமற்ற, தீமைபயக்கின்ற, விரயமாக்கின்ற, பெருமளவிலான தவறான வகையிலான உதவியையே பெறக்கூடும்.

இதனால்தான் CIC புலமையாளர்கள் “மோதுகைக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் மீளாக்கத்திற்கான உபாயங்கள்”அவசியமென்று வாதிடுகின்றனர் (போர்மன் பெற்றிக் மற்றும் சலோமன்ஸ் 2000 பக் 57). அவர்கள் இடைவெளியை நிரப்புவதற்கு ஒரு நம்பிக்கை நிதியம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஆலோசனையாக வழங்கினார்கள்”. அந்த நிதியம் இதுபற்றிய சர்வதேச சமூகத்தின் பதிற்குறிகளை ஒன்றிணைப்பதற்கான ஒர நிறுவனமாக தொடக்கப்பெற்று நடத்தப்படல் வேண்டும் என்று கூறினார். இவை ஒவ்வொன்றும் காலவரையறை உடையனவாக அமைந்து இயங்குதல் அவசியம். அதேவேளையில், ஒரு நீண்ட கால நாட்டு அபிவிருத்தி திட்டமொன்றும் வகுக்கப்பெற்று அர்ப்பணிப்பு உணர்வுடன் அதற்கான நிதியங்கள் தோற்றுவிக்கப்பெற்று (உபநம்பிக்கைப்பொறுப்பு நிதியங்களாக), பல்தரப்பு மற்றும் இருதரப்பு உதவி முகவர் நிலையங்களும் மற்றும் அ.சா.நி.களும் களநிலையில் தொழிற்படத் தொடங்கும் வரை மேற்கூறிய நடைமுறை பயன்பாட்டில இருக்கும். இந்த உதவுதுணை அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பு முறைமைகளின் வலுமிக்க மைய அமைப்புக்கள் (பிரேட்டன் வூட்ஸ் நிறுவனங்கள் உள்ளிட்ட வகையில்) பங்கேற்கக்கூடியதாகவும், பிராந்திய அமைப்புகளுக்கும், பங்களிக்கவிரும்பும் அரசாங்கங்களுக்கும் மற்றும் அ.சா.நி. பிரதிநிதிகளுக்கும் அணுகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அது சொந்த தயாரிப்பு மற்றும் பகுப்பாய்வு மற்றும் தயாரிப்பு பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளையும் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் ஒரு நிலையான நம்பிக்கை பொறுப்பு நிதியை அல்லது முன்பே பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்பட்ட தயார்நிலை நிதி ஏற்பாட்டையும் கொண்டதாக இருக்கும். உலகவங்கி எந்த நம்பிக்கை நிதிய ஏற்பாட்டுக்கும் நிதியியல் முகவராக தொழில்படும். அதேவேளையில் செய்திட்டவேலைகளுக்கான ஐ.நா. அலுவலகம் (UNOPS) நிர்வாக மற்றும் பொருள்சார் ஆதரவை இந்த உதவு துணை குறித்த செயலகத்திற்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.



## 4. மீள் ஒருங்கிணைப்பின் சவால்கள்

பன்முக செயற்பாட்டாளர் நடவடிக்கையை கூட்டிணைப்புச் செய்வதற்கும், இடையீட்டுச் செய்திட்டங்களுக்கான யதார்த்த பூர்வமான குறிக்கோள்களை ஆக்குவதற்கும் கவனத்துடன் மேற்கொள்ளும் மோதுகைப் பகுப்பாய்வு அவசியப்படுகின்றது. போமன் பட்ரிக் மற்றும் சலோமன்ஸ் (2000 பக் 14) கூறுவது போன்று 1990களில் உள்ளகமோதுகைகளை முடித்துவைத்த பல சமாதான உடன்படிக்கைகளோடு சேர்ந்துவந்த பாரிய எதிர்ப்பார்ப்புகளைக் கொண்ட புனர்நிர்மாணத் திட்டங்கள் “பன்முக, சிலவேலைகளில் மோதுகைப்படும் அரசியல் சமூக பொருளாதார குறிக்கோள்களைக் கையாண்டு வந்திருக்கின்றன”. தவறுதல்கள் மற்றும்

தீர்க்கப்படாத இக்கட்டு நிலைகளை பொஸ்னியாவின் அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இலகுவில் பாதிப்புக்குள்ளாக் கூடிய குழுக்களின் தேவைகளுக்கு முகம்கொடுத்தல், சமூக நீதிக்கோட்பாடுகளின்படி புனர்நிர்மாணத்திற்கும், புத்துயிர்ப்பாக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஒரு முக்கிய சவாலாகும். அதேவேளையில் சமூக மாற்றத்தையும், மாற்றுநிலையாக்கத்தையும் பெருக்குவோராக, செயற்படக்கூடிய குழுக்களை இனங்காணுவது அவசியமாகும். பின்வரும் பிரிவுகள் இச்சவால்களை திட்டவட்டமான உதாரணங்களுடன் விளக்குகின்றன அவை விசேடமாக வோல்ஜன்ஸ் அனுபவங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

## 4.1 அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தோரை மீளிணைப்புச்செய்தல்

அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை திருப்பியனுப்புதல் மற்றும் மீளிணைப்பு சம்பந்தமான பிரச்சினைகள் சர்வதேச மனிதநேய நிகழ்ச்சி நிரலில் மிகவும் முக்கியமான விடயங்களாக மாறியுள்ளன. அவை நிவாரணம், அபிவிருத்தி மற்றும் மனிதவுரிமை அமைப்புகளின்கவனத்தை மாத்திரமல்லாமல் சிரேஷ்ட அரசியல் மற்றும் இராணுவ தீர்மானங்களை மேற்கொள்வோரின் கவனத்தையும் ஈர்த்துவருகின்றன. கடந்த 80களின் பிற்பகுதியில் மத்திய அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் இப்பிரச்சினைக்கான ஒரு பிராந்திய அணுகுமுறை அவசியமென்று ஆரம்பித்த முன்முயற்சிகளோடு பொஸ்னியா, கம்போடியா, மொசாம்பிக் அல்லது நபீபியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட அனேகமான ஒவ்வொரு பிரதான சமாதான உடன்படிக்கை விடயமும் இடம்பெயர்ந்த மக்கள் திரும்பிவருவது தொடர்பிலான திட்டவட்டமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. இத்துறையில் யூ.என்.எச்.சீ.ஆர் ஒரு முக்கியமான வகிபாகத்தை வகிக்கிறது. பீஸ் பிரிகேட் இன்டர்நெஷனல் போன்ற அ.சா.நி.கள் திருப்பியனுப்புதல், பாகாப்பற்ற முன்நிபந்தனைகளின்கீழ் சொந்தநாட்டுக்கு திரும்பும் மக்களுடன் உடன்சென்று உதவும் செயல்முறைகள் சம்பந்தமாக செழுமையான அனுபவத்தை பெற்றுள்ளன. இந்த அனுபவங்கள் உதாரணமாக ஹயிட்டி, கொலம்பியா, கௌதமாலா போன்ற நாடுகளில் கிட்டியவையாகும் (மஹோனி 1999 ்மற்றும் எகுரென் 2003).



திருப்பியனுப்புதலும் மீளிணைப்பும் யுத்தத்தால் சின்னாபின்னமடைந்த சமூகங்களின் சமாதானத்தை கட்டியெழுப்பும் முறைவழிக்கு எவ்வாறு பங்களிப்பு வழங்கமுடியும்? இந்த வினாவுக்கு பெரும் எண்ணிக்கையிலான ஒன்றினுள் மற்றொன்று மாட்டுப்பட்டுள்ள பிரச்சினைகளோடு இணைத்து வைத்து பதில் தேடப்பட வேண்டும்:

1. பெரும்பான்மையான இடம்பெயர்ந்த அல்லது வெளியேற்றப்பட்ட மக்கள் முறையே தமது சமூகங்களுடன் மீள இணைக்கப் பெறாதவரையில் இயல்புநிலை ஏற்படுமென்று எதிர்பார்க்க முடியாது. வலுக்கட்டாயமாக இடம்பெயரல் அல்லது அகதிகள் நகர்வுகள் ஒரு வழமைக்கு விரோதமான புலன்நிகழ்வாகும். அது தனது குடிமக்களுக்கு பாதுகாப்பை வழங்கமுடியாத ஒரு நிலையையும், குடிமக்களின் பல்வேறு குழுக்கள் ஒன்றோடொன்று அருகருகே சமாதானமாக வாழமுடியாத சூழ்நிலையையும் காட்டுவதாகும். சுய விருப்பத்துடன் இடம்யெர்ந்த மக்கள் திரும்பிவருவது, கண்டுணரக்கூடிய வடிவத்திலான ஒரு முன்னேற்றத்தைக் குறிப்பதால் அது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முறை சம்பந்தமான பொதுமக்களின் விசுவாசத்தில் ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் (யூ.என்.எச்.சீ.ஆர் 1997 பக்9).
2. திருப்பியனுப்புதல் மோதுகைக்கு பிந்திய அரசியல் ஒழுங்குமுறையை செல்லுபடியாக்குவதில் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. அகதிகளுக்கு மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச்செல்வதற்கு தங்களது அரசியல் விருப்பு தேர்வுகளை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம்

வழங்கப்படுவது சுதந்திரமான, நியாயமான, ஜனநாயகமான தேர்தல் எனும் எண்ணக்கருவிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

3. நாட்டைவிட்டு வெளியெறிய மக்கள் திரும்பிவருவதும், மீளஇணைக்கப் பெறுவதும் அகதிகள் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் துடிப்பாகச் செயலாற்றும் சூழ்நிலைகளில் சமாதானத்திற்கான ஒரு முன்நிபந்தனையாக இருக்கக்கூடும். உதாரணமாக கம்போடியா, நமீபியா, நிக்கரகுவா மற்றும் ருவாண்டாவில் அகதிகள் திரும்பிவந்தமையும், இராணுவத்திலிருந்து அவர்கள் தனியாகப் பிரித்து வைக்கப்பட்டமையும் யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கான மாற்றுநிலையாக்கத்தின் ஒரு முக்கிய படியாக அமைந்தது.

4. இடம்பெயர்ந்த மக்கள் திரும்பி வருவது யுத்தத்தால் சீரழிந்த அரசுகளின் பொருளாதார மீட்சிக்கு ஒரு முக்கிய பங்களிப்பை செய்யக்கூடும். இடம்பெயர்ந்த மக்களின் உயர்வான விகிதாசாரம் சமூகவேவைகள், விவசாய முறைமைகள் மற்றும் ஏனைய அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன என்பதே இதற்கான காரணமாகும்.

ஆபிரிக்கமுனை மற்றும் எதியோப்பியாவின் ஒகாடன் பிராந்தியம் (UNHCR 1997) போன்றவற்றின் உதாரணங்களும் உள்ளன. இங்கு முன்னாள் அகதிகளும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களும் திரும்பி வந்தபின்னர் உள்;ர்ப் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்டுகின்றனர். திரும்பிவருவோர் பெருமளவிலான நிதி மூலவளங்களை கொண்டுவராவிடினும், பல விடயநிகழ்ச்சிகளில் அவர்கள் கணிசமான அளவிலான மனித மற்றும் சமூக மூலவளங்களைக் கொண்டுள்ளனர்.

மறுபுறத்தில் பாரிய எண்ணிக்கையிலானோர் திடீரென திரும்பி வருவது அவர்கள் குடியமரும் பிரதேசங்களில் கணிசமான அளவு சுமைகளை ஏற்படுத்தக்கூடும். புகலிடம் வழங்கும் நாடு, திரும்பி வருவதற்கும், மீளிணைப்பதற்கும் தயாரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படாத நிலையில் மக்களை திருப்பி அனுப்பும்பொழுது இதுவே நடக்கிறது.

போருக்குப்பிந்திய பிராந்தியங்களில், உதாரணமாக, போல்கன்ஸில் பல்வேறு மோதுகை நிகழ்வுகள் மேற்கவிந்து ஒன்றையொன்று பலப்படுத்துவதும் தெளிவாகியுள்ளது. இவை வித்தியாசமான மத அல்லது இனத்துவக்குழுக்கள், நகர்ப்புற - கிராமிய மோதுகை மற்றும் அத்தோடிணைந்த கலாசார வேறுபாடுகள், வளங்களின் சமத்துவமற்ற விநியோகங்களினால் எழும்மோதுகைகளுடன் இணைந்துள்ள மோதுகைகளாகும். மோதுகை முடிவுற்ற பிராந்தியங்களில் அகதிகளும், இடம்பெயர்ந்தோரும் திரும்பிவருவதும், மீளிணைப்பைப் பெறும்பொழுதும் கணிசமான மோதுகைச் சாத்தியப்பாடுகளைக் கொண்டிருப்பதோடு, புதிய வன்செயலுக்கும் இட்டுச்செல்லலாம். அவர்களை அரிதாகி உள்ள வீடமைப்பு வசதிகள், மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு உள்ளூர் மக்களுடன் போட்டியிடுவார்களேயானால் அல்லது சொத்து உரிமைகளுக்க தீர்வு காணப்படாவிடில், இது மிகவும் பொருந்துவதாகும். முக்கியமாக, மரபுரீதியான நகர்ப்புற-கிராமப்புற மோதுகை 1990களில் யுத்தத்தினால் திணிக்கப்பட்ட புலம்பெயர் முறைவழிகளால் மேலும் கூடுதலான முக்கியத்துவத்தை பெற்றது. இந்த வேளையில் பெருந்தொகையான கிராமப்புற மக்கள் நகரங்களில் குடியேறி, அநேகமானோர், பலர் இன்றுங்கூட அங்கேயே தங்கியுள்ளனர்.

பொஸ்னியாவில் இடம்பெயர்ந்தோர் மீள்வருகை பெருமளவு கவனத்தைப்பெற்ற விடயமாகும். 4.4 மில்லியன் சனத்தொகையில் 2மில்லியன் மக்கள் அகதிகளாயினர் அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்தனர். திரும்பிவரும் முறைவழியில் ஒரு தொடரான தோல்விகள் ஏற்பட்டன. டேயிட்டன் உடன்படிக்கையின் பின், தொடர்ந்து சிறுபான்மையினர் திரும்பிவருவது

தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றின. முன்னர் சர்வதேச முன்னுரிமை சிறுபான்மையினரை திரும்பிவரச் செய்வதாகவே இருந்தது. யுத்தத்தின்காரணமாக பொஸ்னியா- ஹெர்சிகொவினா பிரிக்கப்பட்டு இனக்குழும ரீதியில் சுத்திகரிக்கப்பட்ட ஆட்புலங்களாக மாற்றப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதென்பதே இதற்கான காரணமாக இருந்தது. இறுதியில் மக்களுக்கு அவர்கள் இனக்குழும சிறுபான்மையோரின் ஒரு பகுதியாகவிருக்கும் பிராந்தியங்களுக்கும், சூழலமைவுகளுக்கும் திரும்பி வரச்செய்யும் செயலூக்கத்தை வழங்குவது இயலாதுபோயிற்று. முதியவர்களே அவ்விடங்களுக்கு செல்ல விரும்பினர், இளைஞர்களும், நடுத்தரவயதினரும் புலம்பெயர்ந்த இடங்களில் தங்க விரும்பினர்அல்லது வேறு விருப்புத் தெரிவுகளை நாடினர். பல வருடங்கள் கழிந்தநிலையில் 1998இல் திரும்பி வரும் ஆண்டுகள் படுதோல்வியில் முடிவடைந்ததும் பொஸ்னியா- ஹெர்சிகொவினா உயர் பிரதிநிதியும் (HR) வேர்களை ஓடவிட்டுள்ளனர் என்பதையும் பகைமையுணர்வுமிக்க ஆட்புலன்களுக்கு திரும்பிவருவதற்கு விருப்பமின்றியுள்ளனர் என்பதையும் அங்கீகரிப்பதாகும். முன்னாள் உயர் பிரதிநிதி வோல்ப்காங் பெட்ரீஸச் என்பவரின் கூற்றின் பிரகாரம் பழைய இனத்துவ தேசியபடத்தை மீளுருவாக்கம் செய்வதும், ராஜதந்திரிகளும் கலைஞர்களும் பெரிதாகப் பேசும் பொச்சினியாவில் இனக்குழும மற்றும் பல் கலாசார சமூகத்திற்கு புத்துயிருட்டுவதும் மேலும் சாத்தியமற்ற விடயங்களாகி வருகின்றன. இதற்கான காரணம் முன்னாள் உயர் பிரதிநிதிகூறியது போன்று உன்மையான அரசியல் குறிக்கோள்களை பின்பற்றும் வெளிநாட்டவர்கள் இடம் பெயர்ந்த மக்கள் தாம் பாதுகாப்பு அற்றவர்களாக உணர்வதும், தமக்கு எதிர்காலத்தில் எவ்வித வாய்ப்புக்களும் இல்லையென உணர்வதுமான ஓர் இடத்திற்கு திரும்பி வருவார்களென எதிர் பார்க்கமுடியாது என்பதாகும்.(பெட்ரிட்ஸ்ர் 2001, ப 313)



ஐரோப்பிய யூனியனும் அகதிகள் திரும்பி வருவது குறித்த அவர்களின் அரசியல் குறிக்கோள்களை மீளாய்வு செய்ய ஆரம்பித்தது. திரும்பிவரும் உரிமை இன்னமும் உயர்வாக மதிக்கப்படுகிறது. ஆயினும், தற்போது பின்பற்றப்படும் அணுகுமுறை அகதிகளின் தெரிவுச் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் அதேவேளை அவர்களின் ஆரம்ப வாழ்க்கைப் பிராந்தியங்களுக்குத் திரும்ப விரும்பும் சகல நபர்களுக்கும் சட்ட மற்றும் நிதியியல் ஆதரவை வழங்குவதாகும். ஆகவே UNHCR தொடர்ந்தும்சிறுபான்மையோர் திரும்பி வருவதை ஆதரித்தது. ஆயினும் புதிய வாழ்விடங்களில் புலம்பெயரலை இலகுபடுத்தும் வகையில் ஏனைய தீர்வுகளையும் கவனத்தில்கொண்டது. பல அகதிகள் தமது புதிய வாழ்விடங்களில் நன்கு வேரோடிய நிலை காணப்பட்டதாலும் பகைமை உணர்வுகொண்ட ஆட்புலத்திற்கு திரும்பிச்செல்வதற்கு எந்த விதமான விருப்பமும் தெரிவிக்காததாலும் முன்னாள் உயர் பிரதிநிதி வொல்ப்காங் பெட்ரிட்ஸ்ச் அவர்களின் கூற்றின் பிரகாரம் இராஜந்திரிகளும், கலைஞர்களும் பெரிதாகப் பேசிக்கொள்ளும் பொஸ்னியாவில் பல இனக்குழும, பல்பண்பாட்டு சமூகத்தை மீட்டெடுப்பது இயலாத விடயமென்பது படிப்படியாகவே உணரப்பட்டது. இதற்கான காரணம் உயர்வான அரசியல் குறிக்கோள்களை வைத்திருக்கும் வெளிநாட்டவர்கள், இடம்பெயர்ந்த நபர்கள் தாம் பாதுகாப்பற்றவர்களாக உணரும் இடங்களுக்கு திரும்பி வருவார்கள் என்றும், தமக்கு எதிர்காலம் எதுவும் இல்லாத இடங்களுக்கு மீண்டும் செல்ல விரும்புவார்கள் என்றும் எதிர்ப்பார்க்க முடியாது என்பதாகும்.

டேயிட்டன் உடன்படிக்கையை வரையும்போதும் கவனத்தில்கொள்ளப்படாத மேலுமொரு பிரச்சினை, யுத்தத்தோடு தொடர்புடைய மாற்றங்கள் முறைமைநிலை மாற்றங்களின் விளைவாக எழும் மாற்றங்களோடு இணைவது என்பதாகும். உதாரணமா, நகரப்புற கிராமப்புற புலம்பெயர்வால் செயல்முறை யுத்தத்தின் காரணமாக பெரிதும் வேகமடைந்துள்ளது. ஆயினும் முறைமைநிலை மாற்றத்தோடு தொடர்புள்ள பொருளாதார முறைவழிகளின் விளைவாகவும் இது நிகழ்ந்திருக்கக்கூடும். ஏனெனில், இந்த புலம்பெயர்தல் சம்பந்தமான முன்னேற்றங்கள்

பொருளாதாரமாற்றத்தின் ஒரு பகுதியாகும். (ஒரு விவசாய சமூகத்திலிருந்து கைத்தொழில் சமூகத்திற்கான மாற்றுநிலையாக்கம் போன்றவை) இந்த வகையில் சிறுபான்மையோர் திரும்பிவருவது அளவுக்குமீறிய வற்புறுத்தல் மாத்திரமன்றி பெரும் எண்ணிக்கையிலான மக்கள் குழுக்களை மக்கள் வசிக்காத (பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைமையை அடைந்த) கிராமிய பிராந்தியங்களுக்கு பலவந்தமாக திருப்பி அனுப்புதலும், அந்த இடங்கள் அனர்த்தத்திற்கு முன்னர் அவர்கள் வசித்த பிரதேசங்களாக இருந்தாலும் கூட-இது உண்மையிலேயே காலத்தோடு இசைவாக்காத விடயங்களாகவே தோன்றுகின்றன. சொத்து உரிமைகளை தெளிவுபடுத்துவதும், யுத்தத்தின்போது சொத்துக்களை இழந்தவர்களுக்கு அவற்றைத் திருப்பிக்கொடுப்பதுவும் சமாதானத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாத முன் நிபந்தனைகளாகும். பலவந்தமான புலம்பெயர்வால் தொடர்ச்சியாக மோதுகைகளுக்கு இட்டுச்சென்ற பின்னர் திருத்தப்படாத சொத்துப்பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் அகதிகள் கொள்கையில் குடியேற்றங்களின் மாதிரிகளும், இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் பிரிக்கமுடியாத அம்சங்களாக இடம்பெறுதல் வேண்டும். உதாரணமாக, பொஸ்னியாவில் ஐரோப்பிய யூனியன் சொத்துகள் ஆணைக்குழுவை ஏற்படுத்தியது. ஆயினும், தீர்வுக்கு பிந்திய சூழ்நிலைகளில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு மிக நீண்டகாலம் எடுக்கும் என்பதை அனுபவம் காட்டியுள்ளது.

யுத்தம்சம்பந்தமாக ஏற்படும் பலவந்த புலம்பெயரல் முறைவழியில் தன் பிரதிநிதிகளிடையே மூலவளங்கள் விநியோகம் மற்றும் குடியேற்ற பிரதேசங்களில் வாழ்விடவியல் சமநிலை என்பவற்றின் மீது பாரிய தாக்கத்ததை ஏற்படுத்துகின்றது. இம்முறைவழியின்வெற்றியாளர்களும் தோல்வியாளர்களும்உள்ளனர் (பொஸ்ச்மான் 2003.U37) அத்தோடு பொதுவாக அகதிகளே தோல்வியாளர்களென்றும் ஏனையோர் வெற்றியாளர்களென்றும் அனுமானிப்பது மிக இலகுவானதாகும். யுத்தத்தால் சீரழிந்த சமூகங்களின் யதார்த்தம் இதைவிட மேலும் சிக்கலானதாகும்.

உண்மையில் அகதிகள் தாம் வைத்திருந்ததை இழக்கின்றனர். எவ்வாறாயினும்,அவர்கள் குடியேறும் பிரதேசங்களின் அகதி முகாம்களுக்கு வெளியில் வாழும் உள்ளூர் மக்களும் பாராதுரமாகப் பாதிப்புற்றிருக்க கூடும், அவர்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கக்கூடும். அகதிகளுக்கு உணவும் பொருட்களும் இலவசமாகவும், அத்தோடு உள்ளூர் வளங்களான தண்ணிர், நிலம் என்பவையும் கிட்டக்கூடும். இவற்றிற்கு உரிய நட்டஈடு எதுவும் அவர்களுக்கு கிடைக்காவிட்டால் உள்ளூர் மக்களைவிட அகதிகள் மேலும் சிறப்பான வாழ்க்கை நிலைமைகளை அனுபவிக்கக்கூடும்.

டேயிட்டன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்ட போதும் நிவாரண விடயங்கள் மற்றும் மீள் வருகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியபோதும் கவனத்தில் கொள்ளப்படாத விடயங்கள் உண்டு. அவை போர் தொடர்பான மாற்றங்கள் முறைமை மாற்றங்களால் ஏற்படும் மாற்றங்களுடன் இணைந்து வரும் என்பதாகும். உதாரணமாக யுத்தத்தின் காரணமாக நகர்ப்புற-கிராமிய இடம்பெயர்வு முறைவழி பாரிய அளவுக்கு துரிதமடைந்துள்ளது. ஆயினும் முறைமை மாற்றுநிலையாக்கத்துடன் தொடர்புள்ள பொருளாதர முறைவழிகள் காரணமாக இது எவ்வகையிலும் இடம்பெற்றே இருக்கும். ஏனெனில் இந்தப் புலம்பெயர்வு முறைவழிகள் பொருளாதார மாற்றத்தின் ஒரு பகுதியாகும். (விவசாய சமூகத்திலிருந்து கைத்தொழில் சமூகத்துக்கான மாற்றுநிலையாக்கம் பேணல்) இது விடயத்தில் சிறுபான்மையோர் திரும்பிவருதல் அளவுக்கதிகமான வற்புறுத்தல் மாத்திரமன்றி மக்கட் செலவு குறைவாக்கப்பட்ட பொருளாதர ரீதியில் வங்குரோத்து நிலையாகவே தோற்றமளிக்கிறது.

யுத்தகாலத்தில் சொத்துரிமையும் சொத்துக்களை இழந்தோருக்கு அவற்றை மீண்டும் வழங்குவதைத் தெளிவுபடுத்துவதும் வெற்றிகரமாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு

அவசியமானதாகும். அரசியல் முறைமையும் உருவாக்கத்தையும் புனரமைப்புச்செய்தல் அல்லது புத்தாக்கம் செய்தல், சட்ட நிலைத்தகவலுள்ள ஓர் அரசாங்கத்தையும், அதிகாரப்பதிவு மாதிரிகளையும் ஏற்படுத்துதல், பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கு உரையாடல் மற்றும் உடன்படிக்கைகளுக்கான முரண்பாட்டு பகுப்பாய்வு அவசியமாகும். போர்மன் பற்ரிக் மற்றும் சலோமன்ஸ் ஆகியோர் (2000, ப 14) கூறுவது போன்று 1990களின் போது பல உள்ளக மோதுகைகளை முடிவுறுத்திய பல சமாதான ஒப்பந்தங்களுடன் சேர்ந்து முன்னெடுக்கப்பட்ட அதிக எதிர்பார்ப்புக்களைக் கொண்ட புனர்நிர்மானத்திட்டங்கள் பல் தரப்பு மற்றும் சிலவேளைகளில் மோதுகின்ற அரசியல் சமூக மற்றும் பொருளாதாரக் குறிக்கோள்களை நிறை வேற்றியிருக்கின்றன. பொஸ்னியாவில் அகதிகளைத் திருப்பியனுப்புதல், உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்களைத் திருப்பியனுப்பும் விடயத்திலான அனுபவங்களிலிருந்தும் தோல்வியிலிருந்தும் மற்றும் தீர்வுகாண முடியாத இருதலைப்பொறி நிலைகளிலிருந்துமான பாடங்களைக் கற்றுக்கொள்ளமுடியும். ஒரு சவால் மிகவும் இலகுவில் பலியாகக்கூடிய குழுக்களின் தேவைகளை நிறைவேற்றுவதும், சமூகநீதிக் கோட்பாடுகளின் பிரகாரம் புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்றுக்கொள்வதுமாகும். அதேநேரத்தில் சமூகமாற்றம் மற்றும் மாற்றுநிலையாக்கத்துக்கான பெருக்கல் முகவர்களாக பணியாற்றக்கூடிய குழுக்களை இனங்காணுவதும் அவசியமாகும். பின்வரும் பகுதிகள் இச்சவால்களை திட்டவட்டமான உதாரணங்களுடன் விளக்குகின்றன. விசேடமாக இவை போல்கன்ஸ் நாடுகளின் அனுபவங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

முக்கியமான ஒரு பாடம் என்னவெனில், மீள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் (உதாரணமாக விதைபொருட்கள் வீடமைப்பு அல்லது கல்வி வசதிகள் போன்ற பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தைப் பொறுத்தவரையில்) விசேட இலக்குக்குழு ஒன்றில் அளவுக்கதிகமாக கவனம்செலுத்தக்கூடாது. தீவிரமாக ஒரு இலக்குக் குழுவுக்கு மாத்திரம் ஆதரவை மட்டுப்படுத்துவது (உதாரணமாக அகதிகள் மாத்திரம், முன்னாள் போராளிகள் மாத்திரம்) உட்கிடையான பாரபட்சம் அல்லது இந்த இலக்குக்குழுவில் சேராத ஆயினும் வாழ்க்கை நிலைமைகள் அதைவிட மேம்படுத்தப்படாத ஏனைய குழுக்கள் உள்ளடக்கப்படாமல் விடும் ஆபத்தைக்கொண்டுள்ளது.



ஆட்களைத்திருப்பியனுப்பும் உதவி மற்றும் மீள் ஒருங்கிணைப்புக்களான முன்முயற்சிகளில், தற்போது அங்கு வசிக்கும் மக்களைத் தவிர்க்கும்வகையில் திரும்பிவரும் மக்கட்தொகையின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன எனும் புலன்கருத்துணர்வு ஏற்படாதவகையில் கவனமாகச் செயலாற்றுதல் வேண்டும். மீள் ஒருங்கிணைப்பு வெற்றியடையவேண்டுமாயின், புனரமைப்பு முயற்சிகள் முழுச் சமுதாயத்தையும் உள்ளடக்குவதாயும், அனைவரின் உரிமைகளுக்கும் உரியமதிப்பளிப்பதாயும் இருத்தல் வேண்டும்.

செய்திட்டம் ஒரு மோதுகைச்சூழ்நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துமாயின், அவ்வாறாயின் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைத் தீர்மானிப்பது முக்கியமானதாகும். மேலும், இவ்வாறு மோதுகை முகாமைத்துவ முன்முயற்சிகளும் சமாதானத்தை கட்டியெழுப்புவதில் எவ்வாறு சேர்த்துக்கொள்ளப் படலாம் என்பதைக் கண்டறியும் ஓர் ஆவலும் உள்ளது. உடனடியாக போருக்குப் பின்னரான பிரந்தியங்களில் வெறுப்புணர்வு எப்போதும் வலுவாக இருக்கும். கவனமான தயாரிப்பின்றி உரையாடல் அரங்குகளை ஆரம்பிப்பது வெற்றியளிக்காது என்பதுடன், மட்டுப்படுத்தமுடியாத இயக்கவியல்களை கட்டவிழ்த்துவிடவும் கூடும். ஆயினும், இணைந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் எதிர்க் கருத்துள்ள பன்மைத்துவ சமூகத்தை வடிவமைக்கும் பகிரப்படு முறைவழிகளில் ஓர் அடிப்படையை வழங்கக்கூடும். அது பொஸ்னியா, ஹெர்சிகொவினா உதாரணம் வெளிப்படுத்துவது போன்று கடந்தகாலத்தை கையாளுவதற்கும் உதவியாக அமையக்கூடும்.

**பெட்டி.4 :எதிர்காலத்தை : கட்டியெழுப்பும் இளைஞர்கள்: வலுவூட்டல் பயிற்சி மற்றும் வருமானம் பிறப்பித்தல்.**

2002ஆம் ஆண்டில் பொஸ்னியாவில் ஆர்வச் செயற்பாட்டாளர்களால் (துஸ்லாவில் இப்பாக் அ.சா.நி மற்றும் ஜேர்மன் அமைப்புக்களான ஸ்கூலர் ஹெலபன் லெபன் மற்றும் பேர்கோவ் ஆய்வுநிலையம் போன்றவற்றைச் சேர்ந்த) எதிர்காலத்தை கட்டியெழுப்பும் இளைஞர்களெனும் பெயர்கொண்ட ஒரு கூட்டு முன்முயற்சி ஏற்படுத்தப்பட்டது. இச்செய்திட்டம் கிழக்கு பொஸ்னியாவில் ஒரு இளைஞர் நிலையத்தையும், இளைஞர் கூட்டுறவு அமைப்பையும் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டதாகும். 1995 இல் பொஸ்னிய யுத்தத்தின்போது, துஸ்லாவில் இளைஞர் தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களுக்கு பதில் செயற்பாடாக ஏற்படுத்தப்பட்டதே ஜேர்மன் பொஸ்னியா அ.சா.நிறுவனமான இப்பாக் என்பதாகும். இத்தாக்குதலின்போது 71 இளைஞர்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்குமதிகமானோர் காயமுற்றனர். 1997 தொடக்கம் துஸ்லாவுக்கு அருகில் சிமின்ஹான் என்ற இடத்தில் ஓர் இளைஞர் நிலையத்தை இப்பாக் பேணிவருகிறது. இந்த நிலையத்துக்குப் பல இளைஞர்கள் வருகை தருகின்றனர். இப்புதிய செய்திட்டமாகிய எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் இளைஞர்கள் இளைஞர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டதாகும். அது சேர்பியன் கிராமங்களில் இருக்கும் இளைஞர்களையும், பொஸ்னியா திரும்பி வருவோரையும் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக்கொண்டதாகும். இது ஒன்றுகூடல், சர்வதேச பரிவர்த்தனை, ஓய்வு நேரப்பொழுதுபோக்கு தொழில்சார்பயிற்சி மற்றும் வருமானம் பிறப்பிக்கும் முன்முயற்சிகளை வழங்குவதன்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு குறிக்கோள் அபிவிருத்தி அணுகுமுறைகள் சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல், பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு திசை மார்க்கம் கொண்ட சமுதாயப்பணி மற்றும் மோதுகை முகாமைத்துவம் என்பவற்றை ஒன்றிணைப்பதாகும்.

வித்தியாசமான இனக்குழுமங்களைச் சேர்ந்த கிராமிய சமுதாயங்களின் இளைஞர் நிலையத்தை நிர்மாணித்தல், மரவேலை, கைத்தொழிலிலும் விவசாய உற்பத்தியிலும் அவசியப்படும் திறன்களை பயிற்றுவித்தல் என்பன சம்பந்தமாக இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவித்தல் ஆகியவை இதன்நோக்கம் ஆகும். இது பயிற்சி வழங்குவதற்கும் அப்பால்சென்று இளைஞர்களை வருமானம் பிறப்பிக்கும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகும். இதன்மூலம் பிறப்பிக்கப்படும் நிதி பின்னர் செய்திட்டத்தினுள்ளேயே பிரவகித்துச்செல்கிறது. இவற்றோடு உளவள ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களும் இடம்பெறும், (போதைப்பொருள் தடுப்பு, மன அதிர்ச்சிவடு) சர்வதேச இளைஞர் பரிவர்த்தனை நிகழ்ச்சித்திட்டங்களினூடாக சமுதாயப் பணிகள் மற்றும் அஹிம்சை நடவடிக்கைகள் மற்றும் மோதுகை முகாமைத்துவ கருத்தரங்குகளும் இடம்பெறும். ஒரு கூட்டுறவு அமைப்புடன் இணைந்துகொள்ளல்மூலம் சில இளைஞர்களுக்கு இளைஞர் நிலையத்தை நிர்மாணிப்பதில் சந்தர்ப்பம் வழங்கும் ஏனையோர், இந்த நிலையத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். இக்கருத்து திரும்பிவரும் அகதிகளால் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும். இது இதுவரை புனர்நிர்மாணங்களில் சர்வதேச முன்முயற்சியில் வீடுகளைக்கட்டியெழுப்பும்

அகநிலை அமைவுகளைக்கட்டியெழுப்பும் தொழில்நுட்பப் பரிமாணங்கள்மீது பிரதானமாக கவனம்செலுத்தி, சமுதாயத்தினை உதாசீனம் செய்தமை குறித்த அனுபவங்களால் ஏற்பட்டதாகும்.

செய்திட்டத்தின் ஆரம்பத்தில் இப்பாக் அணிக்குழுமம் இளம் ஆர்வச்செயற்பாட்டாளர்களைக் கொண்ட ஓர் வலையமைப்பைக் கட்டியெழுப்பியதன் மூலம் உள்ளூர் சூழலில் கிடைக்கும் தகவல்கள்மீது கவனம் செலுத்தி பின்னர் பெற்றோர், பிள்ளைகள் பாடசாலை மற்றும் பிரத்தியோகமாக செய்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் பல்வேறு கிராமங்கள் மற்றும் இனக்குழும பின்னணியைக்கொண்ட ஆசிரியர்கள் என்போரையும் இதில் ஈடுபடுத்தினர். இதுவரை செய்திட்டத்தின் ஆக்கமூட்டும் அனுபவங்களில் ஒன்று செய்திட்டத்தை மெதுவாகவும், கவனமாகவும் நடைமுறைப்படுத்துதல்மூலம் இளைஞர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமுதாயப் பணியாளர்களைக் கொண்ட விசேட கவனிப்புடன் கூடிய ஒரு வலைப்பின்னலை உருவாக்கமுடியும் என்பதாகும். இந்த நோக்கங்களுக்காக பணிக்கமர்த்தப்படும் மக்கள், உள்ளூர் அரசாங்கங்கள் அடிக்கடி மாற்றமுறும்போதும் இப்பிராந்திய ரீதியில் அதிகாரக்கட்டமைப்புகள் தேசிய வளக்குழுக்களால் இன்னமும் ஆதிக்கம் செலுத்தப்படும் போதும் பிரதிநிதிகளுடனும், உள்ளூர் நிர்வாகிகளுடனும் உரையாடல் மேற்கொள்வதை வலியுறுத்தல் வேண்டும்

பல்வேறு காரணங்களின் நிமித்தம் இளைஞர்கள் சம்பந்தமுறும் வருமானம் பிறப்பிக்கும் முயற்சிகளில் சமாதானம் மற்றும் மனித உரிமைப்பணிகளை ஒருங்கிணைத்தல் இன்றியமையாததாகும். இளைஞர்கள் தாமே வருமானம் பிறப்பிக்கக்கூடியவர்களாக இருந்தால் அது அவர்களின் குடும்ப நிதிநிலைமையை மேம்படுத்தி, அவர்களின் சுயமதிப்பை அதிகரித்து, அவர்கள் சமுதாயத்தில் ஓரிடத்தையும், ஓரளவு மரியாதையையும் பெற்றுக்கொள்ள வழியமைக்கிறது. இது சுய ஒழுங்குபடுத்தல்களுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடும். உதாரணமாக இளைஞர் நிலையம் அல்லது ஈடுபாட்டு நடவடிக்கைகள் என்பவை இளைஞர்கள் தாமே பிறப்பித்த நிதிகளோடு கூட்டுநிதியளித்துச் செயற்பட முடியும். இது வெளி நாட்டு கொடைவழங்குநர்களில் தங்கியிருப்பதை குறைத்து, உள்ளூர் அ.சா.நி. துறையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும். இவ்வாறாக, இது பரணமிக்கும் சிவில் சமூகத்துக்கு அனுகூலமாய் அமையும்.



போருக்குப்பிந்திய பிராந்தியங்களில் சலுகையற்ற சமூகங்களின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளித்தல் பரந்த அளவில் இடம்பெறுகிறது. ஆயினும், இளைஞர்களுக்கு வருமானம் பிறப்பிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் முன்முயற்சிகள் சிறிதேயாகும். வறுமை ஒழிப்பிற்காக சிறுகடன் திட்டங்கள் இளைஞர்களால் ஒரு வீதாசாரமற்ற அளவிற்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும், அவர்களின் தேவைகள்மீது கவனம் செலுத்துவதில்லை. அத்தோடு அவற்றின் பயனும் ஐயத்துக்கிடமானதாகும். வருமானம் பெறும் சிறு செய்திட்டங்கள் போட்டியை அதிகரித்து, தனிநபர் முன்முயற்சியை அதிகரிப்பதால் அவை மேலும் பொருத்தமாய் அமைவதோடு இந்த இலக்குக் குழுவிற்கு மிகவும் அவசரத்தேவையாக அறிமுகப்படுத்தப்படல்வேண்டும்.

தொடர்ச்சியாக நிகழும் மூளைசாலிகள் வெளியேற்றமும் போருக்குப்பிந்திய பிரதேசங்களில் இளைஞர்களுக்கு ஆதரவு வளங்கும் முன்முயற்சிகளைக்கோருகின்றது. கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்களின் பிரகாரம் பொஸ்னியா இளைஞர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் சந்தர்ப்பம் கிடைத்தால் தாம் நாட்டைவிட்டு வெளியேறத்தயாரென்று தெரிவிப்பதோடு, பலருக்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. அத்தோடு இளைஞர்கள் சட்டவிரோத வியாபாரத்தொடர்புகளில் ஈடுபடும் ஆபத்தும் உள்ளது, அல்லது அவர்கள் ஏதாவது நிலைபேறான வாய்ப்பு வழிகள் இல்லாதவிடத்து தேசிய வாத சக்திகளால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அபாயமும் உள்ளது.

## 4.2 முன்னாள் போராளிகளை (மீள) இணைத்தல்

அகதிகள் மீள்வருகை பற்றிய பிரச்சினையின் அடியில்- ஆண்கள், பெண்கள், சிறார்கள் என இனம் காணப்படத்தக்க முன்னாள் போராளிகளின் மீள்ஒருங்கிணைவு பற்றிய ஒரு விசேட கவனக்குவிவு சமாதானத்தை கட்டியெழுப்பவதற்கான அவசியமாக அண்மைக் காலத்தில் இருந்து வந்துள்ளது.(பொஸ்ச்மான்2003, ப-40, கிங்மா 2001,ஸ்டுட்னர் 2001) முன்னாள் படைவீரர்கள் போதுமான அளவிற்கு சமுகத்தில் மீளிணைப்பு செய்யப்படாவிடில், அவர்கள் குற்றவியல் அமைப்புகளுள் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அல்லது கறுப்புச்சந்தையில் சம்பந்தமுறும் நிலைமை உள்ளதால் மோதுகைக்குப்பிந்திய செயற்பாடுகளில் படைக்கலைப்பும், மீளிணைப்பும் நெருக்கமான அம்சங்களினூடாக நோக்கப்படுதல் வேண்டும். பொஸ்னியா ஹொர்சிகொவினாவில் பல்வேறு படைக்கலைப்பு அலைகள் இடம் பெற்றன. இதற்குச் சர்வதேச முகவர் நிலையங்கள் ஆதரவு வழங்கின. பாதுகாப்புதுறை சீர்திருத்தம் குறித்த பொதுவான எண்ணக்கருவினுள் படைக்கலைப்பு மற்றும் மீளிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பொதிந்திருத்தல் வேண்டுமென்பதை உணர்வதற்கு ஐந்து வருடகாலம் பிடித்தது (ஹினமன் குறாடர் மற்றும் பியெட்ஸ் 2003 ப 4). பாரிய மீளிணைப்பு செய்திட்டங்கள் உலகவங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினாலும் (IDA) புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச சங்கத்தினாலும் (IOM) செயற்படுத்தப்படுகின்றன. உதாரணமாக உலக வங்கியின் அவசரகால படைக்கலைப்பு மற்றும் மீளிணைப்பு செய்திட்டம்(EDRP) உழைப்பாளர் சந்தைத் தகவல் உளவள ஆற்றுப்படுத்தல் சேவை,வேலை பெற்றுக்கொடுக்கும் சேவைகள், கல்வி மற்றும் மீள்பயிற்சி சேவைகள், மற்றும் முகாமைத்துவ உதவி குறித்த விதிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. முன்னோடி அவசரகால தொழிலாளர் மீள் பயன்படுத்தலானது (PELRP) விவசாயத்திலும், சிறிய அளவிலான வியாபாரத்திலும் ,சுயதொழில் வாய்ப்பிலும், நிறுவன ரீதியான கல்வியிலும் மற்றும் தொழில்செய்யும் வேலையிலும் பயிற்சி செலுத்தியது. முன்னாள் படைவீரர்களுக்கான IOM இடைமாற்றஉதவி (PELRP) சந்தைப்படுத்தக்கூடிய திறன்களை அபிவிருத்தி செய்வதாகும். மாற்றத்திற்கான பொன் சர்வதேச நிலையத்தைக் (BICC) சேர்ந்த புலமையாளர்களால் செய்யப்பட்ட ஒரு மதிப்பாய்வு சமீபத்தில் வெளியிடப்பட்டது (ஹினமன் குருடர் மற்றும் பியெட்ஸ்). ஆரம்பகால உலகவங்கி நடவடிக்கைகள் (ஈடிஆர்பி) இவ்விரு அமைப்புகளின் அமைச்சுக்களுடனும், பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களிலான வேலைவாய்ப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக பெரும்மளவுக்கு கடுமையாக பாதிப்புற்றது என்பது பிரதான தேடல் முடிவுகளாகும். மேலும் பொஸ்னியாவின் அதியுயர்வான வேலையின்மை விகிதாசாரம் பாரிய இடர்களை அதிகரித்தது. குறைந்த கல்வி மட்டமும் வலிந்து செயற்படும் தன்மையின்மையும் முன்னாள் படைவீரர்களுள் ஒரு சிறு விகிதாசாரத்தினர் மாத்திரமே மீளிணைப்புச் செய்யப்படும் நிலைக்கு காரணமாக இருந்தது. இரண்டாவது செய்திட்டம் (PELRP) தற்போதைய உழைப்பாளர் சந்தை மற்றும் வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு இடையே உணர்வூட்டப்பட்ட நிறுவனச் சீர்திருத்தங்கள் குறித்து முக்கியமான பின்னூட்டல்களை வழங்கியது. IOM இன் நடவடிக்கைகளில், படைக்கலைப்பின் பின்னர்

இப்படையினர் சமுதாயத்தில் இடம் பெறும் அதன் சேவைகளில் அக்கறை மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்த முயன்றமையால் அவை வெற்றிகரமாக அமைந்தன. அத்தோடு, இவர்கள் இன்னமும் படைமுகாம்களில் இருந்த வேளையிலே தொடர்பாடல் மற்றும் தகவல் வழங்குதல் என்பவை சாத்தியமாயின. குறுகிய கால வேலைகளுக்கு மானியம் வழங்கப்படுவதைவிட தொழில் வாய்ப்பு நடவடிக்கைகள் பயனுறுதியாகவும், நிலைபேறு கொண்டவையாகவும் அமைந்தன. அமைச்சுக்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பு இடம் பெற்றது. IOM இன் கடப்பாட்டுக் குடியியல் கல்வி சம்பந்தமான கருத்தரங்குகளையும் விண்ணப்பதாரிகளுக்கு அறிமுகம் செய்தது. இக்கருத்தரங்குகள் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகம் போன்ற பிரச்சினைகளிற் கவனஞ்செலுத்துகின்றன. BICC மதிப்பீட்டு ஆக்கக்கூறும் IOM செய்திட்டத்தின் வேறுசில அம்சங்களும் மிகவும் வெற்றியளித்ததாகவும் அவை ஏனைய செய்திட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கின்றது.

1. சுயவேலைவாய்ப்பையும் சுயசார்பையும் ஊக்குவித்தல்
2. உளவள ஆற்றுப்படுத்தலுக்கு தனிநபர் மயப்படுத்தப்பட்டதும், தேவைகள் அடிப்படையிலானதுமான அணுகுமுறை
3. நிதியுதவி மற்றும்
4. வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான ஆதரவு

இந்த ஆய்வின் ஒரு முக்கியமான பெறுபேறு யாதெனில், முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கக்கூடிய நிலைபேறான தேசிய கட்டமைப்புக்களை உருவாக்குதலை சர்வதேச ஆய்வு நோக்கமாக கொண்டிருக்க வேண்டுமென்பதாகும். வெறுமனே பெருளாதார மீளிணைப்பு மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் குறுகியவையாகும். ஒவ்வொரு படைவீரரினதும் தனித்துவமான மற்றும் உளவியல் சூழ்நிலை கருத்திற்கொள்ளப்படுதல்வேண்டும். படைக்கலைப்பு செய்யப்பட்ட வீரர்களில் பெருமம்பான்மையானோர் தமது இராணுவத்திற்குப் பிந்திய வாழ்க்கைக்கு தயராகவில்லை என்பதை பொஸ்னியா விடயநிகழ்வு காட்டியுள்ளது. அவர்கள் சேவையில் இருக்கும் காலத்தில் திறந்த பயிற்சிக்கல்வி அல்லது உளவியல் ரீதியான உதவியென்பவை மூலமும் இந்த நிலைமை எட்டப்படவில்லை. பல முன்னால் படைவீரர்களின் அதிகாரப்பாங்கிலான சிந்தனைகளும் மற்றும் இனக்குழுமரீதியில் ஏனையோரின் கருத்துக்களை பிரத்தியேகமாக ஒத்துக்கொள்ளாத மனப்போக்குக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மேலும் போர் அனுபவங்களில் அமைப்புக்களின் பல் பிரதிநிதிகள் முன்னால் படைவீரர்களுக்கு உளவியல் ரீதியான உதவி வழங்கப்பட வேண்டியதன் வாழ்வாதாரமான முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன இது பல பிரதான மீளிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் குறைவாகக் கணிக்கப்பட்ட ஓர் அம்சமாகும். (பிளமன் குரூடர் மற்றும் இயேட்ஸ் 2003. பக் 31)



## 5. நல்ல செய்முறை வடிவமைப்பு:உள்ளூர் ஆற்றுதிறனை வலுப்படுத்தலும் பெண்களின் தேவைகளுக்கு தீர்வு காணுதலும், பால் நிலைக்கூருணர்வும்.

போரினால் பாதிப்புற்றோருக்கு உதவிகளை வழங்குவதில் மாத்திரம் கவனம் செலுத்துபவையும், உள்ளூர் மக்களின் உரிமை உணர்வை உதாசீனம் செய்பவையுமான நிவாரணம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு நிரந்தரமான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறைக்கு ஊக்கமளிப்பதற்குப் பதிலாக அவை அடிநிலைப்பாதிப்பை ஏற்படுத்துபவையாக நீண்ட காலத்திற்கு தங்கி நிற்கும் நிலைகளை உருவாக்கும் இடர்வரவை எதிர்நோக்குகின்றன. உதாரணமாக, பொஸ்னியா ஹெர்சிகொவீனாவில் ஒரு தங்கி நிற்றல்

உளப்போக்கை அவதானிக்கலாம். முன்னாள் உயர் பிரதிநிதி (வோல்ப்காங் பெட்ரிட்ஸ் 2001, பக் 25) பின்வருமாறு கூறியுள்ளார்: உதவியாக வழங்கப்படும் ஒவ்வொரு டொலர் பணமும் சர்வதேச சமூகம் எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் கொடுத்துக்கொண்டே இருக்கும் என்று சிலர் எண்ணுவதற்கு இட்டுச் சென்றுள்ளது. அவரது அனுபவத்தின் பிரகாரம் உயர்பிரதிநிதியின் நடவடிக்கைகள் அநேகமான சந்தர்ப்பங்களில் பொஸ்னியா - ஹெர்சிகொவீனாவிலுள்ள அரசியல் வாதிகளுக்கு தமது பணியை முறையாகச் செய்யாதிருப்பதற்கான மிகச்சிறந்த ஒரு காரணத்தை வழங்கியுள்ளது. அது பொஸ்னியா சனத்தொகையின் பாரிய பிரிவினர்கள், பொஸ்னியாவில் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான முழு பொறுப்பையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கும் வகையில் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு பின்னர் தலைக்கு இவ்வளவு தொகைப்பணம் என்று ஐரோப்பாவுக்கு கிடைத்த பணத்தைப்போன்று நான்கு மடங்கு பணத்தை பொஸ்னியா 1995 - 2000 காலப்பகுதியில் பெற்றுக்கொண்டது. இச்சூழ்நிலையைச் சாராம்சப்படுத்துவதாயின் தந்தைவழி அரசினிடத்தை தந்தைவழி மனிதாபிமான உதவியெடுத்துக் கொண்டது என்று ஒருவர் கூறலாம். (ஸ்டப்ஸ். 2001 பக் 4) பொஸ்னியாவிலுள்ள பிறரில் தங்கியிருக்கும் மனப்போக்குக்கு பெருமளவிலான சர்வதேச பிரசன்னம், உதவி சம்பந்தமான நிச்சயமற்ற எண்ணக்கருக்கள் மற்றும் டேயிட்டன் ஒப்பந்தத்திலேயே உள்ள அடிப்படையான தவறுகளே காரணம் போலத் தோன்றுகின்றது.

ஸ்டப்ஸ் தெளிவுபடுத்தியுள்ளதுபோன்று டேட்டனின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆட்சியாப்பினுள் எந்த உயர் தேசிய முகவர் நிலையமும் சமூகக்கொள்கையில் பிரதான கவனம் செலுத்தவில்லை. முன்னணி முகவர் நிலையங்களின் முயற்சிகள் அரசாங்கம், மனித உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி, புனர்நிர்மாணம் மற்றும் மீள்வருகைபோன்ற வெறுமனே தொழில்நுட்ப சட்டங்களுக்கே கவனம் செலுத்துபவையாக அமைந்திருக்கின்றன. நிவாரண இடையீடுகள் அநேகமான சந்தர்ப்பங்களில் உப-ஒப்பந்தப்படுத்தல்களின் அ.சா.நிறுவனங் களினூடாக அல்லது உள்;ர் அ.சா.நி களினூடாக தொழிற்படும் நிலை இருந்துள்ளது. யுத்தத்திற்கு முன்னர் பொஸ்னிய தொழில்சார் நிபுணர்கள் சமூக சேவை நிலையங்களில் தாபித்திருந்த உள்;ர் ஆற்றல்களும், திறன்களும் பயன்படுத்தப்படவில்லை. **இவ்வாறாக நலனோம்புகை ஆட்சிக்குழு தேவைகளடிப்படையிலான அரசியல் தலையீடுகளற்ற ஒன்றாக விருப்பத்திற்குபதிலாக பிளவுற்ற உள்ளூர் தன்மைகொண்ட, கழிந்த மீதி வகைப்பிரிவு அடிப்படையிலான ஒன்றாகியது (அதேமூலம் பக்5). மிகவும் ஏழ்மையுள்ள குடும்பங்களில் வருமானம் வழங்குவதற்காக பல அவசர நிதிகளை உலகவங்கி ஆரம்பித்தது. ஆயினும், இத்திட்டத்திற்கு நிலைத்தகைவு எதுவும் இருக்கவில்லை கொடைகள் நின்று விட்டதும் திட்டத்தைத் தொடரும் எந்த சிந்தனையும் இதில் உள்ளடக்கப்படவில்லை (அதேமூலம் பக்11).**

கொடைவழங்குநர் சமூகம் யுத்தத்துக்கு பிந்திய இந்த சமூகத்திற்கு வழக்கத்தைவிட அதிகமான கவனம் செலுத்திய போதிலும் பல புலமையாளர்களின் பார்வையில் பொஸ்னியா விடயநிகழ்வு ஓர் ஆக்கபூர்வமான உதாரணமாக கொள்ளப்படவில்லை. சர்வதேச உதவியில் எதிர்ப்பார்க்காத சில பக்க விளைவுகள் ஏற்பட்டதே இதற்கான காரணமாகும். (ஷினெக்னர் 2003, பக்58)

1. மனிதநேய உதவி கைத்தொழில் பொதுத்துறையின் இடத்தை மாற்றீடு செய்தது. இது உள்ளுர் உழைப்பாளர் சந்தை மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக இருந்தது. தகைமை படைத்த நபர்கள் சர்வதேச அமைப்பிற்கு அல்லது (செயற்கையாக அதிகரிக்கப்பட்ட) அ.சா.நிறுவன துறைக்கும் பணியாற்றுவதை விரும்புகின்றனர். இதனால்

இவர்கள் உள்ளூர் உழைப்பாளர் கட்டமைப்புக்குள் ஒன்றிணைப்பை பெறவில்லை .

2. 1995ல் டேயிட்டன் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் பொஸ்னியா ஹொர்சிகொவினாவுக்கு வழங்கப்பட்ட ஒரு பில்லியன் டொலர் சர்வதேச உதவி கையாடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (இது உயர்பிரதிநிதிகளின் அலுவலகத்தில் ஊழல் எதிர்ப்பு அலகொன்று தாபிக்கப்படுவதற்கு வழியமைத்தது)

3. சர்வதேச நிதி அமைப்புகள் ஊழல், கறுப்புச்சந்தை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புற்ற உள்ளூர் சலுகை பெற்ற ஆளுங்குழுக்களுக்கும், அதிகாரக்கட்டமைப்புகளுக்கும் ஸ்திரநிலையை வழங்கின. யுத்தநிலையில் ஏற்கனவே அனுகூலமடைந்தவர்கள் மீண்டும் சமாதானத்திற்கான சர்வதேச ஈடுபாட்டின் மூலம் பயனடைந்தனர்.

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் சமூக நீதியின் ஒரு முக்கியமான அம்சமாக பால்நிலைச்சமத்துவத்தை நோக்கத்தவறிவிட்டன என்று அபிவிருத்திக்கொள்கை நிறுவனங்களுக்கும், நிவாரண அமைப்புகளுக்கும் எதிராக விமர்சனங்கள் அடிக்கடி எழுந்தன. நெருக்கடிப்பிராந்தியங்களில் பெண்கள் சந்தேகமின்றி மிகவும் சலுகை மறுக்கப்பட்ட குழுக்களாவர். இவ்வாறாக சமூகக்கொள்கைகள் என்பவை ஓர் அபிவிருத்தியுரிமை கருப்பொருளாகவேயுள்ளன. நிவாரண இடையீடுகளோடு அநேகமான சந்தர்ப்பங்களில் இலகுவைக்கப்பட்ட வேலைவாய்ப்புக்களும் சமூக திசைமார்க்கம் கொண்ட முன்முயற்சிகளும் இன்றியமையாதவையாகும்.



அப்பட்டமான அநீதித் தடுப்பிற்கு (மீள்) ஒருங்கிணைப்பு திட்டங்களில் உள்ளூர் சமுதாயங்கள் நெருங்கிய வகையில் சம்பந்தமுறக் கூடியதாக அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என, அரசியல் விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் திணைக்களத்தின் தலைவரான மார்கரட் போக்ட் தெரிவித்துள்ளார். அநேகமான சந்தர்ப்பங்களில் மனிதஉரிமை மீறல் குற்றங்களைப்புரிந்த ஆண்போராளிகள் அல்லது கட்டளைத்தளபதிகள் சுதந்திரமாக நடமாடித்திரிகின்றனர். ஆதரவிற்கான நிகழ்ச்சித்திட்டங்களால் அவர்களுக்கு இருக்கும் தகுதி மூலமாக இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு அவர்களுக்கு உண்மையில் வெகுமதியளிப்பதுபோன்று அவர்களுக்குத் தோன்றியது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், அவர்களின் குற்றங்கள் அவர்களுக்கு உதவியாக அமைந்துள்ளன. இத்தகைய திரிபுபடுத்தல் எப்படியாயினும் தவிர்க்கப்படுதல் வேண்டும். மேலும் பெண் போராளிகள் நிலைமையை உதாசீனம் செய்தல் கூடாது. ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் பல பிராந்தியங்களில் கொரில்லா யுத்தங்களில் ஆண்களுடன் சேர்ந்து பெண் போராளிகளம் போராடி வருகின்றனர். இது அவர்களின் சமத்துவ நிலையை உயர்த்தியுள்ளது போலத் தேன்றுகின்றது. ஆயினும், பகை நடைவடிக்கைகள் முடிந்த பின்னர் அவர்கள் தமது பாரம்பரிய மற்றும் பொதுவான, கீழ்நிலையான கருமங்களினுள் தள்ளப்படுகின்றனர். பிரத்தியேகமாக வெளிநாட்டு கொடைவழங்கும் அமைப்புகள் பெண்போராளிகளின் சமூக மீள் இணைப்புக்கு குறைந்தளவு கவனத்தையே செலுத்துகின்றனர். பொஸ்னியா ஹேர்சிகொவீனாவிலும் மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் விடயத்தில் இது அவதானிக்கப்பட்டடுள்ளது (பிளமர் - குருடர் மற்றும் பியெட்ஸ் பக் 19). ஆகவே ஆயுதக்களைவு, படைகலைப்பு மற்றும் புனர்நிர்மாணம் என்பவை குறித்த நடவடிக்கைகள் போன்ற மட்டத்தில் மாத்திரமன்றி, பெண்கள் பங்கேற்பை உறுதிப்படுத்துதல் முக்கியமாக உள்ளூர் சமுதாயங்களினுள்ளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பெண்களின் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. வழக்கமாக ஓர் அடிப்படையான பிரச்சினை, பகை நடவடிக்கைகள் முடிவுக்குப் பின்னர் புனர்நிர்மாணம் மற்றும் உதவி நிகழ்ச்சி திட்டங்களில் தீர்மானம் மேற்கொள்வதில் பெண்கள் சுற்றயல் நிலையிலேயே சம்பந்தப்படுவதாகும்.

அநேகமான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு தமது கருத்துக்களை வெளிப்படுத்தவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவானவையாகும். உதாரணமாக, அவர்களுக்கு ஊடகங்களால் எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படுவதில்லை. பௌதீக மற்றும் சமூக புனர்நிர்மாணத்துக்கு பெண்களின் வலுவூட்டலுக்கான ஓர் முறையியல் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்பது சர்வதேச விவாதங்களிலிருந்து தெளிவாகின்றது. போருக்குப் பிந்திய சூழ்நிலைகளில் மேலும் அதிகரித்தவகையில் காணப்படும் அம்சமாகிய இல்லத்து வன்செயலுக்கு கவனஞ் செலுத்தவேண்டிய ஒரு தேவையும் உள்ளது. பல பெண்களைப் பொறுத்தவரையில் பகிரங்கமோதல் மற்றும் வன்செயலுக்கான முடிவு சகல வன்செயல்களுக்கும் முடிவைக்குறிப்பதாகாது. முன்னாள் ஆண் போராளிகள் வீடுகளுக்குத் திரும்புகையில் அவர்களது மன அதிர்ச்சி மற்றும் விரக்தி அவர்களின் மனைவிமார்கள் மற்றும் குடும்பங்களின் மீது காட்டும்வன்செயலிலேயே வெளிப்படுகின்றன.ஆகவே பெண்கள்மீதான பாலியல் வல்லுறவுகளும், தாக்குதல்களும் அதிகரிக்கின்றன. அநேகமான சந்தர்ப்பங்களில் கொள்ளை, தாக்குதல் மற்றும் பொருளாதார வன்முறை போன்ற முன்னால் போராளிகளால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு இலக்கானோர் பெண்களேயாவார். (அன்டர்லினி 2001, பக் 37)

மேலும் மாறாதிருக்கும் யுத்தப்பொருளாதாரங்களில், பெண்கள் அடக்கு முறை விபச்சாரம் அல்லது பெண்களை மோசடியான முறையில் கடத்தல் அல்லது அடிமைப்படுத்தல் போன்ற மாபியா கட்டமைப்பின் இலாபம் சம்பாதிக்கும் நடவடிக்கைகளினுள் தள்ளப்படுகின்றனர். பொஸ்னியா - ஹெர்சிகொவீனாவில் பலவந்த விபச்சாரம் சம்பந்தமான அறிக்கைகள் இப்பிரச்சினையை மிண்டும் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துள்ளன. (மனித உரிமைகளுக்கான போம் 2000, லூட்விக் போல்ட்ஸ்மன் நிறுவனம் 2001 உள்ரிச் 2001). இதன் விளைவாக பால்நிலைக்கண்ணேட்டங்கள், தற்போதுள்ள பால்நிலை நிகழ்ச்சிநிரல்களை உள்ளடக்கும் வகையில், பாதுகாப்புப் பிரசினைகள் சம்பந்தமான விவாதங்களில் ஆண்களைப் போலவே பெண்களையும் உள்ளடக்க வேண்டுமென்று சர்வதேச பெண்கள் அமைப்புகள் வாதிடுகின்றன. (அன்டோலினி 2001 பக் 37)



முன்னாள் அமெரிக்க ஸ்தானிகரும் சமாதானத்திற்காக போராடும் பெண்களமைப்பின் ஸ்தாபகருமான சுவானி ஹன்ட் ஓர் அரவனைக்கும் பாதுகாப்பு எண்ணக்கருவையும், சமாதானத்தையீட்டிக்கொள்வதற்கான உள்ளூர் முயற்சிகளுடன் சேர்ந்து பணியாற்றக்கூடிய வகையில், பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இராஜதந்திரகட்டமைப்புகளுக்கும் கைக்கருவிகளை வழங்கும் வகையிலான அழைப்பொன்றை விடுத்துள்ளார். (ஹன்ட் மற்றும் ரோசா, 2001)

இந்த எண்ணக்கரு பெண்களின் முகவராண்மையேயொழிய, இலகுவில் பலியாகுந்தன்மையை வலியுறுத்தவில்லை. மேலும் சமாதான பேச்சு வார்த்தைகளில் பெண்களை அதிக அளவில் ஈடுபடுத்தும் கோரிக்கையும் உள்ளது. இது அவர்களின் சொந்த சமுதாயங்களின் எதிர்காலம் குறித்த முடிவுகளில் அவர்கள் பங்கேற்பதை உறுதி செய்வதற்காகும். இது சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் இயக்கத்தின் ஒரு முக்கியமான வாதமாகும். கிராமசபையிலிருந் பேச்சுவார்த்தை மேசைக்கான இயக்கமானது இன்டநெஷனல் அலேர்ட் அ.சா.நி யினால் ஏற்படுத்தப்பட்டதாகும். (இப்பந்தியில் உயாலா பிரான்சிஸின் பங்களிப்பைப் பார்க்கவும்)

தென்பசுபிக்கில் சமாதானத்தைப் வளப்படுத்தும் முறைவழி குறித்த ஆய்வுகளில் ஈடுபடும் ஓர் ஒப்பீட்டு விடய ஆய்வு, அடிமட்ட நடவடிக்கைகள், பேச்சுவார்த்தை முறைவழிகளில் பெண்களைச்சேர்த்துக் கொள்வது (உள்ளக மற்றும் வெளிவாரி முயற்சிகளிடையே) இணைப்பாளர்களாக கருமமாற்றக்கூடிய பெண் சமாதானப் பணியாளர்களையும் இணைத்துக்கொள்வது போன்வில்லியன் முன்னேற்றத்துக்குப் பங்களித்துள்ளதென்று

வாதிடுகின்றது. இதன் மூலம் மோதுகை முகாமைத்துவம் குறித்த பாரம்பரிய வடிவங்கள் செயற்பாட்டைச் செய்யப்படலாம் என்பதே இதற்கான காரணமாகும். இதற்குமாறாக கருவிகளை வளங்கக்கூடிய பல்நிலைக்குடிமக்கள் அணுகுமுறையும் கோரிநிற்கின்றனர் (வறண்ட வேறு பா. 2001). இந்த எண்ணக்கரு பெண்களில் இலகுவில் பலியாக்கும் தன்மையன்றி அவர்களின் முகவராண்மையை வலியுறுத்துகின்றது. மேலும் பெண்கள் தமது சமுதாயங்களின் எதிர்காலம் குறித்த தீர்மானங்களில் பங்கேற்பதை உறுதி செய்யும் வகையில் சமாதானப்பேச்சுவார்த்தைகளால் அவர்களை மேலும் அதிகரித்த வகையில் ஈடுபடுத்துவதற்குமான கோரிக்கை ஒன்றும் உள்ளது. இது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பெண்கள் இயக்கத்தின் ஒரு முக்கியமான பிரச்சாரமாகும். கிராமசபையில் இருந்து பேச்சுவார்த்தை மேசை வரை என்ற பிரச்சாரம் இன்டர் நஷனல் அலெர்ட் அ.சா.நிறுவன அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது. (இப்பாகத்தில் டயானா பிரான்சிஸ் அவர்களின் பங்களிப்பைப் பார்க்வும்)

அரசியல் பங்கேற்பில் சமமான சந்தர்ப்பங்களைப்பெற்றுக் கொள்வதற்கும் சமூகத்தில் பாத்தியதை உடையோர்களாக ஒரு பாத்திரத்தை வகிப்பதற்கான பெண்களின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் பணி சந்தேகமின்றி ஜனநாயக மயப்படுத்தல், சமமான சமாதான சந்தர்ப்பங்கள் மற்றும் பங்கேற்புக்கான தேவை என்பவற்றிலிருந்தே எழுகின்றது. இவை நிலைபேறான சமாதான ஒப்பந்தங்கள் குறித்த முக்கிய அம்சங்கள் சம்பந்தமான கோட்பாடுகளுமாகும். ஆயினும், இதன் கருத்து அரசியல் செயல்முறைகளில் மேலும் கூடுதலான பெண்களின் விகிதாசாரம் மோதுகை மாற்று நிலையாக்கத்துக்கான மேலும் தீவிரமான முயற்சிகளுக்கு நிச்சயமாக இட்டுச்செல்லும் என்பதாகாது. பெண்களுக்கு மேலும் சிறந்த சமாதானத்தை ஏற்படுத்தும் திறன்களை இயற்கை அளித்துள்ளதென்றும், அவர்கள் உள்ளமைவாக ஆண்களைவிட சமாதானத்தில் நாட்டம் உள்ளவர்கள் என்றும் அனுமானிக்காதிருப்பது முக்கியமானதாகும். இறுதியாக நோக்கும் போது, அவர்கள் எண்ணற்ற சிவில் மற்றும் சர்வதேச யுத்தங்களில் சம்பந்தமுற்றுள்ளனர். அவர்கள் ஒன்றில் போராளிகளுக்கு ஆதரவு வழங்குகின்றனர் அல்லது தாமே போராளிகளாக செயற்படுகின்றனர். வேறு இடங்களில் ஆண்களைப்போன்று பெண்களும் தேசியவாத மற்றும் வெளிநாட்டார் எதிர்ப்பு தத்துவங்களைப் பரப்புவதில் உன்னிப்பாக ஈடுபடுகின்றனர். எப்படியாயினும், சில மோதுகை வலயங்களில் பெண்கள் சமாதான வட்டாரங்களுக்கு அல்லது ஆயுதக்களைவு மற்றும் படைக்கலைப்பு இயக்கங்களில் முக்கியமான பங்காளர்களாக விளங்கியுள்ளனர். மாலியில் ஐக்கிய தேசத்தை பாதுகாப்பதற்காக பெண்களின் தேசிய இயக்கம் சிறு ஆயுத இறக்குமதி, ஏற்றுமதி பெருந்தொகையுற்பத்தியை 3வருடங்களுக்கு நிறுத்தி வைக்கும் தடையொன்றை ஏற்படுத்துமாறு பிராந்திய அரசாங்கங்களைக் கோரும் சிவில் சமூக அமைப்பொன்றை தலைமை வகித்து நடாத்தியது. கௌதமாலாவிலும் லைபீரியாவிலும் சமூகரீதியில் தமது மரபு ரீதியான பாத்திரங்களையும், அங்கீகாரத்தையும் பயன்படுத்தி போராளிகளின் ஆயுதங்களை களைவதற்கான இயக்கங்களில் ஈடுபட்டனர். (அண்டேர்லினி 2000, பக்20)



மோதுகை வலயங்களில் இடையீடு செய்யும் வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள் பெண்களின் சமூக அந்தஸ்து மற்றும் ஆண்களின் பாத்திரங்கள் குறித்து விளங்கிக்கொண்டால், பெண்களின் சாத்தியவளங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்படும். இச்சூழ்நிலையில் (டயானா பிரான்சிஸ் இப்பாகத்தில் சுட்டிக்காட்டியிருப்பது போன்று) பால்நிலை, அகதிகம் மற்றும் கலாச்சாரத்திற்கிடையிலான அடையாளபூர்வமான இணைப்புக்குக் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். தென்பசுபிக் சமாதானத்தை திரட்டியமைக்கும் செயல்முறையை (போஜ் 2002) விசாரணைக்குட்படுத்தும் ஒப்பீட்டு விடய ஆய்வொன்று அடிமட்ட செயற்பாடுகளிலும், பேச்சு வார்த்தை செயல்முறைகளிலும் பெண்களின் குழுக்களை உள்ளடக்குதலும் (அத்தோடு உள்ளக மற்றும் வெளிவாரி முயற்சிகளிடையே இணைப்பாளர்களாகக் கருமப்படக்கூடிய சமாதானம் போலுள்ளவாராகிய பெண்களை உள்ளடக்குவது போகன்வீல் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளதென்று வாதிடுகின்றது. மரபுரீதியான மோதுகை முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயற்படவைக்க முடியுமென்பதே இதற்கான காரணமாகும்.

சொலமன் தீவுகளில் (ஒரு பெண்வழிச் சமூகம் என்றவகையில் நிலச்சொந்தக்காரர்கள் என்ற ரீதியில் பெண்களின் பாரம்பரியப்பாத்திரமும், முக்கியத்துவமும் முறைமையாக நிராகரிக்கப்பட்டு, முழுக்க முழுக்க ஆண்களைக்கொண்ட அமைதிகாக்கும் பணிக்குழுவை அனுப்புவதற்கான தீர்மானம் சமாதானச்செயல்முறை தோல்வியடையக் காரணமாகியது. ஆகவே, போருக்குப்பின்னரான சூழ்நிலைகளில் ஆண்கள் மற்றும் பெண்களின் நிலைகளுக்கு விசேட உணர்வுடனான சமாதானத்தைக்கட்டியெழுப்பும் அணுகுமுறைகளை வடிவமைப்பதும், அவர்களின் வித்தியாசமான யதார்த்தங்கள் மற்றும் தேவைகளுக்கு கவனம்செலுத்துவதுமே போருக்குப்பிந்திய பெண்களும், ஆண்களுமான சமாதானத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடும் அமைப்புகளுக்கான உண்மையான சவாலாகும். புலமையாளர்களும், செயல்பாட்டாளர்களும் மாற்றத்தின் முகவர்களாகப் பெண்கள் வகிக்கக்கூடிய விசேட பாத்திரங்களை வலியுறுத்துவதோடு, இவை சகல புனர்நிர்மாண மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் முன்னேற்றப்படவேண்டும் என்றும் கோருகின்றனர் (போர்மன் மற்றும் சலோமன்ஸ் 2000 ப 3). ஜேர்மன் GTZ அமைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு கொள்கை ஆய்வு அபிவிருத்தியையும் தொழில்நுட்ப ஒத்துழைப்புச் செய்திட்டங்களையும் திட்டமிடும் போது ஒரு பால்நிலைத்தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என விழித்துரைத்துள்ளது. இது இலக்குத் தேசத்தில் சமூக முறைவழிகளை விமர்சனரீதியாக பகுப்பாய்வு செய்து பெண்களுக்கு அவர்களின் ஆக்கபூர்வமான பாத்திரங்களில் எவ்வளவு தூரத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பதையும் ஆய்வுசெய்யும். இந்த ஆய்வு அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு ஒரு நெருக்கடியின்போது பெண்கள் தமக்கென வென்றெடுத்த சில அனுகூலங்களைத் தொடர்ந்தும் வைத்திருக்க உதவவேண்டும். சில நெருக்கடி நிலைகளில் பெண்கள் முன்பு தமக்குத் தடைசெய்யப்பட்டிருந்த சில தொழில்களைப் பொறுப்பேற்றுக்கொள்கின்றனர் என்று வாதிடுகின்றனர். மேலும் அவர்கள் சிறந்த பாத்திரங்களைப் பாதுகாப்பதில் ஆதரவு வழங்க வேண்டுமென்று மீண்டும் பிற்போக்கான அபிவிருத்தி இடம்பெறாதிருப்பது நிச்சயம் செய்யப்படவேண்டுமென்று அது விரைந்துரைக்கின்றது. (மெஹ்லர் மற்றும் ரிபோ 2000, ப 136, இந்த அச்சம் ரெயிமான் 1999,2000, வேரோனியுக் 1999, ஸ்பியர்மன் 1999 ஆகியோரால் வலியுறுத்தப்பட்டுள்ளது



## 6. திறந்த வினாக்கள்

போரினால் சிதைவடைந்த சமூகங்கள் வெளிநாட்டு உதவியைப்பெற்றுக்கொள்வதிலும், அதை முகாமைத்துவம் செய்வதிலுமான தமது இயலுமையைப்பொறுத்தவரையில் பாரிய அளவில் வேறுபடுகின்றன. உதவியைப் பெறுவோர் பெரிய அளவிலான உதவியைப்பயன்படுத்துவதற்கு அல்லது பல்தரப்பு கொடைவழங்குநர்கள் மற்றும் அ.சா.நிறுவனங்கள் மீளிணக்க உதவிபுரிவதற்கு வந்துசேரும்போது அவர்களைக் கூட்டிணைப்புச்செய்வதற்கான மனிதவள, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக இயலுமைகள் இல்லாதவையாகவுள்ளன. பொஸ்னியாவில் இடம்பெற்றதைப்போன்ற அனுபவங்கள் (கொசோவோவிலும் ஏற்கனவே இத்தகைய அடையாளங்கள் தென்படுகின்றன) பெருமளவிலான வெளியக உதவியை உள்ளூர் இயலுமைகளினால் ஏற்றுச்செயற்பட முடியாது போனால் அல்லது நிலை பேறான முறைமைகள் அல்லது உள்ளூர் உரிமை உணர்வின்மீது கட்டியெழுப்பக்கூடிய வகையில் உள்ளூர் இயலுமைகள் பயன்படுத்தாவிடின், எப்போதும் வெளியக முகவர்களே பௌதீக மற்றும் சமூகப் புனர்நிர்மாணத்தைப் பெரியளவில் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பு உருவாக்கக்கூடும். ஆகவே முக்கியமான சவால்களில் ஒன்று கூட்டமைப்பு நடவடிக்கைகளைச் செயல்முறைத் திசைமார்க்கம் கொண்ட முன்முயற்சிகளுடன் இணைப்பதுவும், குறுந்தவணை மற்றும் நெடுந்தவணை செயற்பாடுகளை ஓர் அர்த்தமுள்ள வழியில் கூட்டிணைப்புச் செய்வதுமாகும். இது உதவியை ஒழுங்கமைப்பதில் சர்வதேச சமூக நடைமுறைகளில் எழக்கூடிய பற்றாக்குறைகள் மற்றும் பிரச்சினைகளைக் கையாளுவதை உள்ளடக்குகிறது. இக்குறைபாடுகள் அர்த்தப்பொதிவின்மை, கூட்டிணைப்பு மற்றும் பயனுரிமை மற்றும் நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள் விடயத்தில் யதார்த்தமின்மை என்பவையாகும். இதன்உட்கிடையான கருத்து சர்வதேச கொடையாளர் சமூகத்திலும் மற்றும் ஐ நா முறைமையிலும் மாற்றங்கள்அவசியம்

என்பதாகும்.

முகவர் நிலையங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கிடையிலான கூட்டிணைப்பை மேம்படுத்தும்வகையிலான உத்தி, மோதலுக்குப் பிந்திய மீளமைப்பு வசதிகுறித்த வாதம் நம்பிக்கையூட்டுவதுபோலத் தோன்றுகின்றது. சமீபத்தில் ஏனைய கல்விமான்கள் மற்றும் செயற்பாட்டாளர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட ஓர் உலக சமாதான மன்றத்தை அல்லது உலக சமாதான பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்துவதற்கான பிரேரணையும் இதே திசையைச் சுட்டிக்காட்டுகிறது (பிர்தௌசி 2002,ப 19). இத்தகைய ஒரு முகவர் நிலையத்தை உண்மையில் பயனுள்ள வகையிலும், விடயங்களை மேலும் சிக்கலற்ற ஒளிவுமறைவற்ற தனிமை குறைவான, விசேடமாக உதவிபெறுவோரைப் பொறுத்த வரையில் மேலதிக அதிகாரத்துவ வாதங்களைத் தவிர்க்கும் முறையில் எவ்வாறு வடிவமைப்பது என்ற கேள்வி இன்னமும் உள்ளது. புனர் நிர்மாணம் மற்றும் புரைமைப்பு நடவடிக்கைகள் பயனுறுதிமிக்கதாக அமையவேண்டுமெனில், அவை நீதிக்கோட்பாட்டின்மீது அமைவுறுதல் வேண்டும். இதன் கருத்து தொடர்குற்றச் செயல்களில் ஈடுபடுவேரை நீதிமன்றத்தில் நிறுத்துவதும் பாதிப்புற்றோரின் பொருளாதார இழப்புகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதுமாகும். புனரமைப்புக்கான நடவடிக்கைகள் சமுதாயத்தின் சகல அங்கத்தினர்களுக்கும் பங்கேற்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதில் பயனுறுதி மிக்கவையாக விளங்குதல் வேண்டும். மோதுகை நிலைமாற்றத்துக்கான அனைத்துமடங்கும் நிபந்தனைகள் இல்லாவிடில் (வேறு வார்த்தைகளில் சமூகச்சமநிலை இன்மைகள் பெரிதாகவிருப்பின், யுத்தத்தினால் இலாபம் சம்பாதிப்போருக்கும் யுத்தத்தினால் இழப்புகளைச் சந்திப்போருக்கும் இடையே பாரிய மோதுகைகள் பெருமளவில் காணப்படின் அல்லது சில சமூகக்குழுக்களுக்குப் பொருளாதார வாய்ப்புகள் இல்லாவிடின் சமாதானக்கல்வியிலும், பயிற்சி முயற்சிகளிலும் பயனுறுதிமிக்க விளைவுகள் ஏற்படமாட்டாது. இதற்கு மறுதலையாக பொருளாதார மற்றும் சமூக புனர்நிர்மாணத்தில் கவனம் செலுத்தும் நீண்டகால அபிவிருத்தி உத்திகள் திரும்பிவருவோர் உள்ளூர் மக்கள், அகதிகள், முன்னாள் போராளிகள் என்போரை ஈடுபடுத்துவதன்மூலம் மாத்திரமே சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பயனுறுதியுள்ள பாத்திரத்தை வகிக்கமுடியும். இக்குழுக்களில் எவரையுமே உதாசீனம் செய்தலாகாது. அநீதிகளை தவிர்த்துக்கொள்வதற்கும், சமாதானச் செயல்முறைக்கான சாத்தியவளப்பங்காளர்களை பெற்றுக் கொள்வதற்கும் அகதிகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் மற்றும் முன்னாள் போராளிகளை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அவசியமாகும்.

## உரு 1. மோதுகையிலிருந்து மீளுவதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகள் கட்டுக்கோப்பு துறை / நடவடிக்கைகள்

| துறை / நடவடிக்கைகள் | நெருக்கடி | நெருக்கடிக் குப் பின்னர் | இனக்கத் துக்குப் பின்னர் | நீண்ட கால புனர் நிர்மாணம் |
|---|---|---|---|---|
| **1. திருப்பியனுப்புதலும், மீள்குடியேற்றமும்** | | ■ | | |
| 1.1 திரும்புவதற்கான போக்குவரத்து ஏற்பாடு | | ■ | | |
| 1.2 உறைவிடம் மற்றும் புனர்நிர்மாணப்பொருட்கள் | | ■ | | |
| 1.3 சமுதாய மீளிணக்கமும், உள்சமூக | | | | |
| ஆலோசனைச்சேவையும் | | ■ | | |
| 1.4 குடும்ப அங்கத்தவர்களைத் தேடுதலும், | | | | |
| மீளிணைப்பும் | | | | |
| 1.5 சொத்துரிமைக்கோரல் நடுத்தீர்ப்பு | | | ■ | |
| **2. பொதுமக்கள் பாதுகாப்பு** | | | ■ | |
| 2.1 கண்ணிவெடியகற்றலும், விழிப்புணர்வும் | | | | |
| 2.2 படைக்கலைப்பு: மீளிணைப்பு மற்றும் மாற்று | | ■ | | |
| வேலைவாய்ப்புச் செய்திட்டங்கள் | | | | |
| 2.3 சிறிய ஆயுதங்கள் கட்டுப்பாடு/ மீள் - | | | ■ | |
| கொள்முதல்கள் | | | | |
| 2.4 பாதுகாப்பு படைகளின் மீள்கட்டமைப்பு / | | | ■ | |
| மீள்பயிற்சி(பொலிஸ், ஆயுதப்படைகள், | | | | |
| உளவு) | | | ■ | |
| 2.5 மனித உரிமைகள் கண்காணிப்பு | | | | |
| 2.6 மோதுகைத் தடுப்பு மற்றும் தீர்வுப்பயிற்சி | ■ | | | |
| **3. அகநிலையமைவுகளை மீட்டெடுத்தல்** | | ■ | | |
| 3.1 நீரும், துப்புரவும் | | | | |
| 3.2 போக்குவரத்து | | | | |
| 3.3 மின்சக்தி பிறப்பாக்கம் | ■ | | | |
| 3.4 வீடமைப்பு | | ■ | | |
| 3.5 திண்மக்கழிவுப்பொருட்கள் அகற்றுதல் | | ■ | | |
| 3.6 தொலைத்தொடர்புகள் | | | ■ | |
| **4. உணவுப் பாதுகாப்பும், விவசாய** | | ■ | | |
| **புனரமைப்பும்** | | ■ | | |
| 4.1 இலக்குவைக்கப்பட்ட உணவு விநியோகம் | | | | |
| 4.2 விதைகள், கைக்கருவிகள் விநியோகம் | | | | |
| 4.3 கால்நடை∴ மிருக வளர்ப்பு கருத்திட்டங்கள் | | | | |
| 4.4 காணிப்பயன்பாட்டுத்திட்டமிடல் | ■ | | | |
| 4.5 நிலக் குத்தகைப் பிரச்சினைகள் | | ■ | | |
| | | ■ | | |
| | | | ■ | |

| துறை / நடவடிக்கைகள் | நெருக்கடி | நெருக்கடிக் குப் பின்னர் | இணக்கத் துக்குப் பின்னர் | நீண்ட தவணையும் புனர் நிர்மாணம் |
|---|---|---|---|---|
| **5. சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலன்புரித் தேவைகள்** | | | | |
| 5.1 அத்தியாவசிய சுகாதாரத் தேவைகள் | ■ | | | |
| 5.2 வைத்திய வசதிகள் புனரமைப்பு: புனர்நிர்மாணம் / பொருளுதவி | | ■ | | |
| 5.3 பொது சுகாதாரத்துறை இயலுமையைக் கட்டியெழுப்புதலும், முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டமும் | | | ■ | |
| 5.4 கல்விவசதிகள் புனரமைப்பு (மற்றும் மீளிணைப்பு) | | | ■ | |
| 5.5 வேலைக்கு உணவு புனர்வாழ்வுச் செய்திட்டங்கள் உள்ளடங்கலாக வேலைவாய்ப்பும், திறன்கள் பயிற்சியும் | | ■ | | |
| 5.6 வறுமைக்குறைப்பு சிறுகடன் திட்டம் | | | ■ | |
| 5.7 வறுமைக்குறைப்பு தொழில் முயற்சி அபிவிருத்தி | | | ■ | |
| 5.8 அத்தியாவசிய உற்பத்தி | | | ■ | |
| **6. ஆளுகையும், சிவில் சமூகமும்** | | | | |
| 6.1 பொது நிர்வாகமும், மீண்டுவரும் ஆகுசெலவும் | | | ■ | |
| 6.2 சிவில்சேவை புனரமைப்பு / சீர்திருத்தம் | | | | ■ |
| 6.3 அரசசார்பற்ற நிறுவனங்களின் இயலுமையைக்கட்டியெழுப்புதல் | | | ■ | |
| 6.4 தேர்தல் செயல்முறையும், நிறுவனங்களும் | | | ■ | |
| 6.5 வாக்காளர் கல்வியும், பங்கேற்பும் | | | ■ | |
| 6.6 தேர்தல் கண்காணிப்பு | | | | ■ |
| 6.7 இலவச ஊடக பயிற்சியும், சட்டப் பரிந்துரைப் பிரசாரமும் | | | | ■ |
| 6.8 நீதித்துறைச் சீர்த்திருத்தம் | | | | ■ |
| 6.9 சிவிலியன் மேற்பார்வையும், பாதுகாப்புப் படைகளை கண்காணித்தலும் | | | | ■ |
| **7. பேரியல்புப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல்** | | | | |
| 7.1 தேசிய நாணயத்தை ஸ்திரப்படுத்தல் | | | ■ | |
| 7.2 நிதி நிறுவனங்களை மீளமைத்தல் | | | | ■ |
| 7.3 படுகடன் நிவாரணம் / பாக்கிகளைச் செலுத்தல் | | | ■ | |

போராளிகள் என்போரின் மீளிணைப்புக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். இச்சூழமைவில் இரண்டு காரணங்களுக்காக இளைஞர், யுவதிகள் விசேட முக்கியத்துவம் வாய்ந்த இலக்குக்குழுக்களாக கருதப்படல் வேண்டும். களநிலைத் தளபதிகளால், எதிர்கால நம்பிக்கை எதுவுமற்ற இளைஞர்களை இலகுவாக ஆட்சேர்ப்புச் செய்ய முடியும். அல்லது அவர்கள் குற்றவியல் கட்டமைப்புகளோடு இணைந்து கொள்வதால் அவர்களின் அனர்த்தம் விளைவிக்கும் சாத்தியவளம் செயற்படுத்தப்படுகின்றது. இதனால் அவர்களை உதாசீனம் செய்யமுடியாது. இரண்டாவதாக இளஞர்களை ஈடுபடுத்துவதென்பதன் கருத்து சமூகத்தின் புத்தாக்கத்துக்கு அவசியமான புதிதுபுனைதல் சமூக மூலதனத்தை அபிவிருத்தி செய்வது என்பதாகும். சமாதானத்தை முன்னேற்றுவதற்கான கூட்டுப்பங்காளர்கள் என்ற வகையில் பெண்களின் சாத்திய வளமும் முக்கியமானதாகும். சமூக நீதி மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் பெண்களின் சட்டம் மற்றும் சமூக சமத்துவத்துக்கு அரசியல் செயல்முறையில் அவர்களின் பங்கேற்புக்கும், சிவில் சமூகத்தில் அவர்களின் தன்னம்பிக்கை மிக்க ஈடுபாட்டுக்கும் கவனஞ் செலுத்தவேண்டியது முக்கியமானதாகும்.

நீதிக்கோட்பாடுகளின் பிரகாரம் சர்வதேச உதவிகளின் ஆதரவுகுறித்த முன்னுரிமை மோதலுக்குப்பிந்திய சமூகங்களில் உள்ள மிக இலகுவில் பலியாகக் கூடிய குழுக்களுக்கே வழங்கப்படுதல் வேண்டும். ஆயினும் மோதலுக்குப் பிந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கென வடிவமைக்கப்பட்ட புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்க உபாயம் மிக இலகுவாக பலியாகக் கூடிய குழுக்கள் தாமே இயல்பாகவே சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவர்கள் அல்லவென்பதையும் இவர்கள் இயல்பாகவே சமாதாச் செயல் முறைகளை இணைப்பவர்களோ, பெருகச் செய்பவர்களோ அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறாக, நீதிக்கோட்பாட்டுக்கும் முன்னால் போராளிகளை மீளிணைப்புச்செய்யும் தேவைகளுக்கிடையிலான சமநிலைதேடும் உதவிகள் அவசியமாகும். இது வன்செயல்கள் மேலும் பரவாமல் தடுக்க உதவும். 489

மோதுகைக்குப் பிந்திய சூழ்நிலைகளில் பெண்களின் வாழ்க்கை அதிகரித்த கவனத்தை பெற்றுத்தருவது ஒரு யதார்த்தமாகும். முகவர் நிலையங்கள் பெண்களை இலகுவில் பலியாக்க கூடியவர்களாக, அல்லது சமாதானத்தை ஈட்டும் விசேட முகவர்களாக நோக்குவதன் மூலம் பால்நிலை எண்ணக்கருவைப் பெண்ணின் விசேட பாத்திரம் அல்லது சாத்தியவளம் என்பதாகக் குறைத்து கணிக்கும் போக்கு காணப்படுகிறது. எவ்வாறாயினும், வன்செயல் கலாசாரத்தை வெற்றி கொள்வதாயின் யுத்தத்தின் உளவியல் சமூக விளைவுகளையும், ஆண்களின் யுத்தத்திற்க பிந்திய யதார்த்தத்தையும் ஆண்மையின் அடையாளத்தையும் ஆய்வு செய்வது அவசியமாகும். இது வன்செயலின் காரணங்கள் மற்றும் இயக்கவியல் சம்பந்தமாக பால்நிலை உறவுகளின் முக்கியத்துவத்தை மறையியல் பகுப்பாய்வு செய்வதற்கு உதவும். இதன் கருத்து அவர்களின் உள அதிர்ச்சிவடு மற்றும் சுய கௌரவ உணர்விழப்பு என்பவற்றையும் கரிசனையுடன் கருத்திலெடுத்தலாகும். உதாரணமாக முன்னால் படை வீரர்கள் பலியானவர்களாகவோ அல்லது குற்றமிழைத்தவர்களாகவோ சிவிலியன் வாழ்க்கைக்கு அவசியமான உள சமூக ஆலோசனை வழிகாட்டல்களை அவாவி நிற்கின்றனர்.

இது படைக்கலைப்பு மற்றும் மீளிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் போதியளவு கவனிக்கப்படவில்லை. பொஸ்னிய உதாரணங்களள் இதை எடுத்துக் காட்டியுள்ளன. மேலும் பால்நிலைக் கண்ணோட்டம் என்பது பலியானோர் மற்றும் குற்றச்செயல் புரிந்தோர் என்ற எளிமையான பங்குகளுக்கும் அப்பாற் சென்று, ஆண்மை மற்றும் பெண்மை குறித்த சமூக நிர்மாணங்களான கருத்தியல்கள் வன்செயல் மோதுகைகளின் கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கு, இக்கருத்தியல்களையும் அடையாள வாதங்களையும் எவ்வாறு மாற்றலாம் என்பது குறித்தும் ஆராய்தல் வேண்டும். மோதுகைத் தாக்கக் கணிப்பீடு இக்கண்ணோட்டத்துக்கு விஸ்தரிக்கப்பட முடியும் எனில் மேலதிக பல்நிலைத்தாக்க மதிப்பீட்டு ஒற்றை

வழிமுறையமைப்புக்களை உருவாக்கி மேலும் விடையங்களை குழப்ப வேண்டிய அவசியம் இல்லை. பால்நிலை அம்சங்களை மோதுகைப் பகுப்பாய்வு மற்றும் தாக்கக் கணிப்பீடு என்பவற்றுக்கான ஒரு வீச்சான கைக்கருவிகளுடன் கூட்டிணைப்புச் செய்யும் வகையில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஆண்மை போன்ற தனித்துவ அடையாளப் பங்குகளை செல்வாக்கு குறித்த அளவுகோல்கள் அபிவிருத்திச் செய்யப்படுதல் வேண்டும். இப்பங்குகளை விஞ்சும் அணுகுமுறைகள் இனங்காணுதல் வன்செயல் கலாசாரங்களை வெற்றி கொள்வதற்கான உபாயங்களுக்கான ஒரு முக்கிய அம்சமாகும்.

மோதுகைத் தாக்கக்கணிப்பீடடுக்கான அணுகுமுறைகள், நிவாரணம், அபிவருத்தி, சமாதானம் மற்றும் மனித உரிமைப்பணிகளில் ஈடுபட்டுள்ள ச.அ.சா.நிறுவனங்கள் மற்றும் அ.சா.நி களிடையே மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். தளக்கோட்டுத் தரவுகள் கூடஇல்லாதவிடத்து மோதுகையினால் சின்னாபின்னமடைந்த சூழ்நிலைகளில் “தரவுப்பசி மாதிரிகளை” பிரயோகிப்பது கடினமானதென்பது நிருபிக்கப்பட்டுள்ளது. எனவே யுத்தத்தினால் சிதைவடைந்த சூழலுக்கு பொருத்தமான அடிப்படை நியமங்களும் சுட்டிகளும் அவசியமாகும். நாட்டின் குறித்த சூழமைவு மற்றும் சூழ்நிலை என்பவற்றை கவனத்தில் கொள்வது அவசியமாகும். இதுவிடயத்தில் கொடையாளர்கள் தமது கண்ணேட்டத்தை மாற்றி, உதவி முகவர்நிலையங்கள் பெறுபேற்று அடிப்படையிலான திட்டமிடலை மேற்கொண்டு முகாமைத்துவம் வெளிப்படும் பிரச்சனைகளைவிடக்கூடுதலாக மதிப்பீடுகளுக்கு பதில்செயற்பாடாக ஏற்படும் திருத்த நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூறவேண்டுமென்று கோரினால், மேலும் நேர்மையான மதிப்பீடுகள இடம்பெறும் என்பதையும் அங்கிகரித்தல்வேண்டும். (போர்மன், பட்ரிக் மற்றும் சலோமன்ஸ் 2000, ப 54). முகவர்நிலையங்கள் வெற்றியடைவதாயின் யதார்த்தபூர்வமான அடிப்படை நியமங்களையும் அளவுகோல்களையும் / அபிவிருத்தி செய்து கொள்ளல் வேண்டும்.



ஆயினும் வெளிவாரிச் செயற்பாட்டாளர்கள் மிகச்சிறப்பான நடைமுறை வடிவமைப்பு மற்றும் சுய- சிந்தனை மற்றும் சுய-மதிப்பீடு நடவடிக்கைமுறைகளைத் தெரிவுசெய்தாலும் அவர்கள் இன்னமும் சர்வதேச சூழமைவுகள் காரணமாக ஏற்படும் சில இருதலைப்பொறி நிலைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

அகதிகளையும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தேரையும் திருப்பியனுப்புதல் மற்றும் அவர்களின் மீளிணைப்பு என்பவை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறைகளில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கலாம். ஆயினும் அகதிகளைத் திருப்பியனுப்புதல் முழுக்க முழுக்க சுயவிருப்ப அடிப்படையிலும் மற்றும் பாதுகாப்பான கௌரவமான சூழலிலேயே இடம்பெறுதல்வேண்டுமென்று நன்கு தாபிக்கப்பட்ட சர்வதேசக் கோட்பாடுகளில் இருந்த போதிலும், உலகில் சமீப காலங்களில் திருப்பியனுப்பப்பட்ட பாரிய விகிதாசாரத்தினைப் பார்க்கும்போது அது ஏதோ ஒரு வடிவத்திலான நிர்பந்தத்தின் பேரிலேயே இடம்பெற்றுள்ளது தெளிவாகின்றது. இது கடந்த காலத்தில் வெளிவந்த பல UNHCR அறிக்கைகளிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய நிர்ப்பந்தம் பல சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே செய்யப்படுவதாகும். அகதிகளைச் சொந்த நாட்டுக்குச் திரும்பிச் செல்லவைக்கும் குறித்த நோக்கத்தோடு அரசாங்கங்களாலும், புகலிடம் வழங்கிய சமுதாயங்களாலும் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்களாலும் நிரப்பந்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் அறியவந்துள்ளது. அத்தோடு, கடந்த சில வருடகாலமாக அகதிகள் தமது நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படும்போது அவர்களின் உயிர், சுதந்திரம் என்பவை இடர்வரவுக்குள்ளாகுமாயின், அவர்களை அவ்வாறு திருப்பி அனுப்பக்கூடாது என்னும் கோட்பாடும் கிரமமான முறையில் காற்றில் விடப்பட்டுள்ளது.(UNHCR)

இந்த நடைமுறை வெளிக்களத்தில் நன்கு வடிவமைக்கப்பட்ட (மீள்) ஒருங்கிணைப்பு உபாயங்களுக்குத் தடையாக அமைந்துள்ளது.

உரு 2 : நிவாரணம் மற்றும் அபிவிருத்திஆகியனவற்றின் ஒன்றிணைவை நோக்கி




ஆதாரம் கொலேடா மற்றும் கொஹேன் (2000 பக்கம் 119)

புத்தாக்கத்துக்கும், புனர்நிர்மாணத்துக்குமான முயற்சிகள் குறித்த மேலுஞ்சிறந்த கூட்டிணைப்புக்கான உரிமைகோரல் ஒரு பொதுவான பிரச்சினையை எதிர்நோக்குகின்றது. யுத்தத்தினால் சிதைவடைந்த சமுதாயங்கள் புனராக்கம் பெறுவதென்பது போட்டிமிக்க சர்வதேச "தர்மம் செய்யும் வியாபாரத்தின்" ஓர் அம்சம் என்பது தெளிவானதாகும். அதே வேளையில், அது தனியார் நிறுவனங்களின் முரண்படும் வியாபர நலன்களின் ஊடாக (கம்பனி பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய அரசாங்கங்களினூடாக) செல்வாக்குச் செலுத்தப்படும் ஒன்றாகும். இந் நிறுவனங்கள் நெருக்கடிப்பிரந்தியங்களில் பொருளாதார (புனர்) நிர்மாணத்தைப் பொறுத்தவரையிலாயினும் சம்பந்தமுற்றுள்ளன. 2003ல் ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான இராணுவத் தலையீட்டின் பின்னர் பிரத்தியோகமாக இது ஓர் ஆழமான பொது விவாதமாக மாறியுள்ளது. யுத்தம் முடிவதற்குமுன்னரே பல நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்களும், கம்பனிகளும் பெருந்தெருக்கள், வீடுகள், அகநிலையமைவுகள் என்பவற்றை மீளக்கட்டியெழுப்பும் பாரிய வியாபாரத்தொழில் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தொலைபேசிக் கட்டண விகிதங்கள் ஒலி,ஒளி செலுத்தலுக்கான வானலைகள், வங்கி முறைமையை மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் பிரத்தியேகமாக இந்த விடயநிகழ்வில் எண்ணைச்சந்தையை மீள்கட்டமைப்புச் செய்தல் போன்ற விடயங்களுக்காகவும் போட்டியிடத் தொடங்கின. சர்வதேச ஊடகங்களில் பேசப்பட்ட விடயம் பாக்தாத் பசாரில் பெரிய வியாபாரம் எவர் கைக்கு போய்ச்சேருமென்பதுவும் அதற்கான விலையை யார் செலுத்தப்போகின்றார்கள் என்பதுமாகும். (பின்ஸ்லர் மற்றும் வன்னாஹ்மி 2003). ஈராக்கிய மக்களுக்கு உண்மையில் தேவையானவற்றை யார் விநியோகிப்பார்கள் என்றவிடயம் அக்கறையுடன் கலந்துரையாடப்படவில்லை.

21ம் நூற்றாண்டில் "வன்செயல் மோதுகையைத் தடுப்பதற்கான ஒரு கலாசாரத்தை" ஏற்படுத்தும் ஐ.நா. செயலாளர் கொபிஅனானின் பிரேரணைக்கு (2001) ஒருதலைப்பட்சமான தடுப்பியல் (மற்றும் ஆக்கிரமிப்பு) தத்துவங்கள் சவால் விடுத்திருப்பது போலத்தோன்றுகின்றது. சில பலம்பொருந்திய மேற்கத்தைய நாடுகளின், பிரத்தியேகமாக அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களங்களிலாவது இராணுவ நடவடிக்கைகளுக்கான அதிகரிக்கும் போக்கு முன்னுரிமை பெற்றுள்ளது. "பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம்" என்னும் எண்ணக்கரு இச்செயல்நெறிக்கு வலுச்சேர்த்துள்ளது. ஐக்கிய நாடுகள் போன்ற பல்தரப்பு அமைப்புகள் முன்னணி பாத்திரத்தையோ, தீர்மனம் எடுக்கும் பாத்திரத்தையோ வகிக்கவில்லை. மாறாக, அவை இக்கொள்கைகளின் விளைவுகளைக் கையாளும் நிலைக்கே மாற்றப்பட்டுள்ளனர். "அமெரிக்கா சண்டையிடுகிறது, ஐரோப்பிய ஒன்றியம் நிதியளிப்புச்செய்கிறது, ஐ.நா உணவளிக்கிறது" என்ற சுலோகத்தின் பிரகாரம் அழிவடைந்த சமுதாயங்களில் புனராக்கம் மற்றும் புனரமைப்பு இடம்பெற்றுள்ளது. இச்சர்வதேச அபிவருத்தி எவ்வாறு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் உபாயங்களுக்கான மூன்றாம் தரப்பு இடையீடுகளைப் பாதிக்கின்றது? மோதுகை மாற்று நிலையாக்கம் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கங்களைக்கொண்ட முகவர் நிலையங்கள் இந்த நிகழ்வுக்காட்சிகளில் பயனுறுதியுடன் பணியாற்றுதல் இயலுமா? அல்லது அவை தமது நம்பகத்தன்மையை இழந்துவிடுமா? 1999 இல் யூகோஸ்லாவியாவில் NATO தலையீட்டின் பின்னர் இந்த இருதலைப்பொறிநிலை ஏற்கனவே உருவாகிவிட்டது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அது மேலும் பிரத்தியட்சமாகியுள்ளது.



## 7 உசாத்துணை நூல்களும், மேலதிக வாசிப்பும்

Anderlini, Sanam N. 2000. *Women at the Peace Table. Making a Difference*, New York, NY: UNIFEM (*see also* http://www.unifem.undp.org/resour.htm).

Anderlini, Sanam N. 2001. *Women, Peace and Security: A Policy Audit. From the Beijing Platform for Action to UN Security Council Resolution 1325 and Beyond*, London: International Alert.

Annan, Kofi 2000. *We the Peoples. The Role of the United Nations in the 21st Century. Millennium Report of the Secretary-General*, New York: United Nations Department of Public Information. http://www.un.org/millennium/sg/report/full.htm.

Auswärtiges Amt (ed.) 2000. *Drittes Forum Globale Fragen. Gleichstellung in Politik, Gesellschaft und Wirtschaft*, Berlin: Auswärtiges Amt.

Berdal, Mats and David Malone (eds.) 2000. *Greed and Grievance. Economic Agendas in Civil Wars, A Project of the International Peace Academy*, Boulder, Co., London and Ottawa: Lynne Rienner Publishers.

Boschmann, Nina 2003. *Wiederaufbauprogramme und 'Complex Emergencies'. EZ-relevante Erfahrungen und Lessons learned*, Eschborn: GTZ.

Böge, Volker 2002. "Friedenskonsolidierung im Südpazifik: Bougainville und Salomonen im Vergleich," *in* Matthies, op. cit.

Böhm, Andrea 2000. "Freier für den Frieden. Die UNO kam einst nach Bosnien, um Mord und Vergewaltigung zu stoppen. Seit sie da ist, blüht die Zwangsprostitution," *Die Zeit*, January 13, 2002.

Boutros Ghali, Boutros 1992. *Agenda for Peace*, New York: United Nations Department of Public Information. http://www.un.org/Docs/SG/agpeace.html.

Boutros Ghali, Boutros 1995. *Agenda for Development*, New York: United Nations Department of Public Information. http://www.un.org/Docs/SG/agdev.html.

Ghali, Boutros 1995a. *Supplement To an Agenda for Peace*: Position Paper of the Secretary-General on the Occasion of the Fiftieth Anniversary of the United Nations, 3. January 1995. http://www.un.org/Docs/SG/agsupp.html.

Cahill, Kevin M. (ed.) 1993. *A Framework for Survival. Health, Human Rights, and Humanitarian Assistance in Conflicts and Disasters*, New York, NY: Basic Books and the Council on Foreign Relations.

Carbonnier, Gilles 1998. "Conflict, Postwar Rebuilding and the Economy. A Critical Review of the Literature, The Wartorn Societies Project," *UNRISD, Occasional Paper No. 2*, Geneva UNRISD.

Caritas Schweiz 2000. "Allianzen für den Frieden," verfasst von Thomas Gass und Geert van Dok, *Positionspapier 8*, Luzern: Caritas-Verlag.

Cernea, Michael M. and Christopher McDowell (eds.) 2000. *Risks and Reconstruction. Experiences of Resettlers and Refugees*, Washington, DC: The World Bank.

Cohen, Roberta and Francis M. Deng (eds.) 1998. *The Forsaken People. Case Studies of the Internally Displaced*, Washington, DC: Brookings Institution Press.

Coletta, Nat J. and Michelle L. Cullen 2000. *Violent Conflict and the Transformation of Social Capital. Lessons from Cambodia, Ruwanda, Guatemala, and Somalia*, Washington, DC: World Bank.

GTZ 1998. *Entwicklungsorientierte Nothilfe (EON). Arbeitskonzept der GTZ*, Eschborn: Deutsche Gesellschaft für Technische Zusammenarbeit (GTZ).

GTZ 2001. *Towards Gender Mainstreaming in Crisis Prevention and Conflict Management.Guidelines for the German Technical Co-operation*, Eschborn: Deutsche Gesellschaft für Technische Zusammenarbeit (GTZ).

Eberwein, Wolf-Dieter 2001. "Humanitäre Hilfe, Flüchtlinge und Konfliktbearbeitung" *in* Truger (ed.), op. cit.

Evers, Tilman (ed.) 2000. *Ziviler Friedensdienst*, Opladen: Leske & Budrich.

Ferdowsi, Mir. A. 2002. "Internationale Politik im 21. Jahrhundert, Introduction," *in* Mir. A. Ferdowsi (ed.). *Internationale Politik im 21. Jahrhundert*, UTB Wilhelm Fink Verlag, 9-29.

Ferdowsi, Mir A. and Volker Matthies (eds.) 2003. *Den Frieden gewinnen. Zur Konsolidierung von Friedensprozessen in Nachkriegsgesellschaften*, Reihe EINE Welt, Stiftung Entwicklung und Frieden, Bonn: Verlag J.H.W. Dietz.

Forman, Shepard and Stewart Patrick, 2000. *Good Intentions, Pledges of Aid for Postconflict Recovery*, Boulder, Co, London: Center on International Cooperation (CIC).

Forman, Shepard, Stewart Patrick and Dirk Salomons 2000. *Recovering from Conflict: Strategy for an International Response, Paying for Essentials*, Policy Paper Series, New York, NY: Center on International Cooperation, New York University.

Forman, Shepard and Dirk Salomons 2000. *Meeting Essential Needs in Societies Emerging from Conflict*, paper prepared by the Center on International Cooperation for the Brookings Roundtable on the Relief to Development Gap. http://www.nyu.edu/pages/cic/pubs/ MeetingEssentialPrint.html.

Galtung, Johan 1976. "Three Approaches to Peace: Peacekeeping, Peacemaking, and Peacebuidling," *in* Galtung, op. cit., 282–304.

Galtung, Johan (ed.) 1976. *Peace, War, and Defence: Essays in Peace Research: Volume II.* Copenhagen.

Heinemann-Grüder and Tobias Pietz 2003. *Turning Soldiers into a Work Force. Demobilization and Reintegration in Post-Dayton Bosnia and Herzegovina*, BICC brief 27, Bonn: BICC.

Hunt, Swanee and Christina Posa 2001. "Women Waging Peace," *Foreign Policy*, May / June, 1-7. http://www.foreignpolicy.com/issue_mayjune_2001.



Kingma, Kees 2001. *Demobilisation and Reintegration of Ex-Combatants in Post-war and Transition Countries*, Eschborn: GTZ.

Kreimer, A., J. Eriksson, R. Muscat, M. Arnold and C. Scott (eds.) 1998. *The World Bank's Experience with Post-Conflict Reconstruction*, Washington, DC: World Bank Operations Evaluation Department.

Ludwig Boltzmann Institute for Human Rights (ed.) 2001. *Combat of Trafficking in Women for the Purpose of Prostitution. Bosnia and Herzegovina. Country Report*, Vienna: Ludwig Boltzmann Institute for Human Rights. http://www.univie.ac.at/bim.

Mahony, Liam 1999. *Risking Return. NGOs in the Guatemalan Refugee Repatriation*, Uppsala: Life & Peace Institute.

Mahony, Liam and Luis Enrique Eguren 2003. *Unarmed Bodyguards*, Connecticut, Kumarian Press.

Matthies, Volker (ed.) 1995. *Vom Krieg zum Frieden. Kriegsbeendigung und Friedenskonsolidierung*, Bremen: Edition Temmen.

Matthies, Volker 2000. *Krisenprävention. Vorbeugen ist besser als heilen*, Opladen: Leske & Budrich.

Matthies, Volker et al. 2002. *Friedenskonsolidierung*. Reihe EINE Welt, Stiftung Entwicklung und Frieden, Bonn: Verlag J.H.W. Dietz.

Mehler, Andreas and Claude Ribaux 2000. *Crisis Prevention and Conflict Management in Technical Cooperation. An overview of the National and International Debate*, Wiesbaden: Universum Verlagsanstalt.

Miall, Hugh, Oliver Ramsbotham and Tom Woodhouse 1999. *Contemporary Conflict Resolution: The Prevention, Management and Transformation of Deadly Conflicts*, Cambridge / Oxford: Polity Press.

OECD/DAC 1998. "Conflict, Peace and Development Co-operation on the Threshold of the 21st Century," *Development Co-operation Guidelines Series: 48*, Paris: OECD.

Perthes, Volker 2000. "Wege zum zivilen Frieden. Nachbürgerkriegsregionen im Vergleich," *Blätter f. Deutsche und Internationale Politik*, H.4, April, 445–455.

Pinzler, Petra and Joachim-Fritz Vannahme 2003. "Basar Bagdad," *Die Zeit*, Nr. 17, 16 April 2003, 19.

Petritsch, Wolfgang 2001. *Bosnien und Herzegowina 5 Jahre nach Dayton – Hat der Friede eine Chance?*, Klagenfurt u.a.: Wieser-Verlag.

Pugh, Michael (ed.) 2000. "Regeneration of war-torn societies," *Global Issues Series*, London: Macmillan Press, New York; St. Martin's Press.

Reimann, Cordula 1999. "The Field of Conflict Management: Why does Gender Matter?," *AFBTexte No. 4,* Bonn: Arbeitsstelle Friedensforschung.

Reimann, Cordula 2001. "Engendering the Field of Conflict Management: Why Gender does Not Matter! Thoughts from a Theoretical Perspective," *Peace Studies Papers,* University of Bradford, Working Paper 2, January, 19–45.

Ropers, Norbert 2000. "Die internen Akteure stärken. Krisenprävention und Konflikttransformation durch Friedensallianzen," *in* Evers, op. cit.

Schloms, Michael 2001. "Humanitarianism and Peace. On the (im-)possible inclusion of humanitarian assistance into peacebuilding efforts," *Paper 01-306*, Berlin: Wissenschaftszentrum Berlin für Sozialforschung.

Schneckener, Ulrich 2003. "Bosnien-Hercegovina: Der aufgezwungene Frieden," *in* Ferdowsi and Matthies, op. cit., 42–69.

Soros Foundation (ed.) 2001. *International Support Policies to SEE-Countries – Lessons (not) learned in Bosnia-Herzegovina.* http:/www.soros.org.ba.

Spearman, Diane 1999. "Performance and Impact Indicators for Evaluating Projects and Progress towards meeting the Commitments to Women, 1999–2001," *Annex to WFP Commitments to Women: Mid-term Review of Implementation*, World Food Program.

Steudtner, Peter 2001. "Die soziale Eingliederung von Kindersoldaten. Konzepte und Erfahrungen aus Mosambik," *Berghof Report No. 6*, Berlin: Berghof Research Center for Constructive Conflict Management.

Stubbs, Paul 2001. "'Social Sector' or the Diminution of Social Policy? Regulating Welfare Regimes in Contemporary Bosnia-Herzegovina," *in* Soros Foundation, op. cit., Chapter 8.

Truger, Arno (ed.) 2001. *Zivile Konfliktbearbeitung,* Münster: Agenda-Verlag.

Ulrich, Stefan 2001. "Entfesselte Blauhelme. UN-Sonderberichterstatterin prangert sexuelle Gewalt von Friedenssoldaten an," *Süddeutsche Zeitung*, 11 April, 8.

United Nations High Commission for Refugees 1997. *State of the World Refugees*, http://www.unhcr.ch/cgi-bin/texis/vtx/publ

United Nations (eds.) 1996. *An Inventory of Post-Conflict Peacebuilding Activities,* Department for Economic and Social Information and Policy Analysis, UN, New York.

United Nations Development Programme (UNDP) Evaluation Office (eds.) 2000. *Sharing New Ground in Post-Conflict Situations. The Role of UNDP in Support of Reintegration Programmes,* New York.

Vogt, Margaret A. 2000. "Preventing and Managing Conflicts: What Role for Women? Statement, Berlin, 8–9.5.2000," *in* Auswärtiges Amt (ed.), op. cit., 82–86.

Wood, Adrian, Raymond Apthorpe and John Borton 2001. *Evaluating International Humanitarian Action*, New York, NY, London: ZED Books in cooperation with ALNAP.

Woroniuk, Beth 1999. *Gender Equality & Peace building: A Draft Operational Framework,* Ottawa: Canadian International Development Agency.

**Useful links**

Active Learning Network for Accountability and Performance in Humanitarian Action (ALNAP), *http://www.Alnap.org*

Bundesministerium für Wirtschaftliche Zusammenarbeit und Entwicklung, Germany (BMZ), *http://www.bmz.de/*

Bonn International Center for Conversion (BICC), *http://www.bicc.de*

Canadian International Development Agency (CIDA), *http://www.acdi-cida.gc.ca*

Caritas Suisse, *http://www.caritas.ch/*

Department for International Development (United Kingdom) DFID, *http://www.dfid.gov.uk*

Deutsche Gesellschaft für Technische Zusammenarbeit (GTZ), *http://www.gtz.de*

Direktion für Entwicklung und Zusammenarbeit, Schweiz (DEZA), *http://www.eda.admin.ch/*

European Community Humanitarian Office (ECHO), *http://europa.eu.int/comm/echo/*

European Commission General Directorate Development, *http://europa.eu.int/comm/development* European Commission General Directorate External Relations (Relex), *http://europa.eu.int/comm/dgs/external_relations/*

International Organization for Migration (IOM), *http://www.iom.int*



Organization for Economic Co-Operation and Development (OEDC), *http://www.oecd.org*

OECD – Development Assistance Committee (DAC), *http://www.oecd.org/dac/*

Reflecting on Peace Project (Collaboration for Development Assistance CDA), *http://www.cdainc.com*

Relief Web, *http://www.reliefweb.int/w/rwb.nsf*

Swedish International Development Cooperation Agency (SIDA), *http://www.sida.se*

United Nations Commission for Human Rights (UNCHR), *http://www.unchr.ch*

United Nations Development Program (UNDP), *http://www.undp.org/erd*

United Nations High Commission for Refugees (UNHCR), *http://www.unhcr.ch*

United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA), *http://www.reliefweb.int/ocha_ol/index.html*

United Nations Office for Project Services (UNOPS), *http://www.unops.org*

United Nations Research Institute for Social Development (UNRISD), *http://www.unrisd.org*

UNRISD – War-torn Societies Project *http:/*/www.wsp-international.org/, *http://www.unrisd.org/wsp*

United States Agency for International Development (USAID) – Office of Transition Initiatives, *http://www.usaid.gov*

Women Building Peace Campaign (International Alert) http://www.international. *alert.org/policy/women.htm*

Women, War and Peace, *http://www.unifem.org/index.php?f_page_pid=149"*

World Bank – Conflict Prevention and Reconstruction Unit (CPR), *http://www.worldbank.org/conflict, http://developmentgateway.org*

World Bank – Post Conflict Unit, *http://www.worldbank.org/postconflict*